மலர் 2 இதழ் 1 ஜூலை, 2017 ISSN : 2454-3993

# தொழிற்பெயர்: தொல்காப்பியமும் பிந்திய இலக்கண நூற்களும்

முனைவர் கி. சங்கர நாராயணன்
உதவிப் பேராசிரியர்
தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகைத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை

தொழிற்பெயர் கட்டமைப்பில் தொல்காப்பியமும் அதற்கு பிந்திய இலக்கண நூற்களும் உருவாக்கிய மரபினையும் மாற்றத்தினையும் எடுத்துரைப்பதற்காக இக்கட்டுரை அமைகின்றது. தொல்காப்பியர் தொழிற்பெயர்க்கு விளக்கம் தரவில்லை. ஆனால் தொழிற்பெயர்ப் பற்றிப் பல இடங்களில் குறிப்பிடுகிறார். எழுத்ததிகாரத்தில் புள்ளி மயங்கியலில் முதனிலைத் தொழிற்பெயர்கள் உகரச் சாரியைப் பெறும் விதத்தினையும், சொல்லதிகாரத்தில் வேற்றுமை உருபுகள் ஏற்பதனையும், விளிமரபில் தொழிற்பெயர் யாது, அதன் இலக்கணம் யாது என்பது பற்றிக் குறிப்பிடவில்லை. தொல்காப்பியம் போன்றே அதற்குப் பின்னர் வந்த இலக்கண நூல்களான வீரசோழியம், நேமிநாதம் போன்றனவும் தொழிற்பெயர்களின் இலக்கணம் குறித்துப் பேசவில்லை. தொழிற்பெயர் குறித்த விளக்கத்தை முதன்முதலில் நன்னூலே தருகிறது.

"வினையின் பெயலே படர்க்கை" (நன் – 286)

எனச் சுட்டித் தொழிற்பெயர் படர்க்கை இடத்திற்கே உரியது என்பதனை உணர்த்துகிறது. சான்று: உணல்நன்று, தினல்நன்று, வருகைநன்று, தொழிற்பெயர்க்கு வினைப்பெயர் என்ற புதிய குறியிட்டினை நன்னூலார் கொடுத்திருப்பதும் சுட்டத்தக்கது. இலக்கண விளக்கமும் நன்னூலினை ஒத்தே தொழிற்பெயருக்கு விளக்கம் அளிக்கிறது (188). முத்துவீரியம் தொழிற்பெயர் குறித்து விளக்கம் தரவில்லை. ஆனால் தொழிற்பெயர் எவ்வாறு விளிஏற்கும் என்பதனைத் தொல்காப்பியத்தைத் தழுவி,

"தொழிற்பெயர்க் கிளவி யேயோடு சிவணும்" (மு.வி.575)

எனத் தொழிற்பெயர்கள் ஈற்றோடு ஏகாரம் வந்து விளிஏற்கும் என்ற கருத்தினைச் சுட்டுகின்றது. இலக்கண விளக்கம் முதனிலை இல்லாமலும் தொழிற்பெயர் வரும் என்ற விளக்கத்தைத் தருகின்றது.

"முதனிலை யின்றியுத் தொழிற்பெயர் மொழிகுவர்" (இ.கொ.343)

சான்று: கூத்து, சண்டை, வேட்டை, பூசல் போன்றவை, கூத்து என்பது கூத்தாடு என்ற வினையில் இருந்து உண்டானது. இது முதனிலை இல்லாமல் தொழிற்பெயராக வந்தது என்பர். இலக்கணக் கொத்து நூற்பாவினைத் தழுவி, இந்நூல் தொழிற்பெயர்க்கு விளக்கம் தருகிறது சுவாமிநாதம்.

"முதனிலையின்றியுந் தொழிற்பெயர் உளவாம்
ஈறிலாத் தொழிற்பெயர் எச்சமு(ம்) முற்றுமாகும்" (சு.நா.51)

இலக்கணக் கொத்து கூறிய விளக்கத்துடன் தொழிற்பெயர் பெயரெச்சமாகவும் முற்றாகவும் பயன்படும் என்ற புதிய கருத்தினை எடுத்துரைக்கிறது. சான்று:

1. பொருள் செயல் வகை என்ற தொடரில் பொருள் செய்யும் வகை என்பதால் தொழிற்பெயர் பெயரெச்சமாக வந்துள்ளது.
2. மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையால்' என்ற தொடரில் 'நிலையில்' என்ற தொழிற்பெயர் வினைமுற்றாக வந்துள்ளது. தமிழ்நூல் தொழிற்பெயர் எது என்பதனை,

"முற்று வினைபோல் ஐந்தொகை யின்றி
எச்ச வினைபோல் எச்சப் படாமல்
தொழிலை மட்டும் சுட்டும் தொழிற்பெயர்." (த.நூ.62)

என விளக்கம் தருகிறது. அதாவது வினைமுற்றினைப் போல் ஐந்தொகை காட்டுவது ஒன்றும் இல்லாமல், எச்சவினைபோல் வினை முதனிலையோடு பொருளெஞ்சி நிற்றல் இன்றி, தொழில் தன்மையை ஆளொடு சார்த்தாது சுட்டுவது தொழிற்பெயர் எனக் குறிப்பிடுகிறது. எவ்வகைப்பட்ட பொருள்களாயினும் அவற்றின் வினையை உணர்த்தும் பெயரே தொழிற்பெயர் என விளக்கம் தரும் தமிழ்க்காப்பு இயம்.

"எவ்வகைப்பட்ட பொருள்களின் வினையை
உணர்த்தும் பெயரே தொழிற்பெயர் ஆகும்" (த.கா.இ.62)

எனவே, தமிழ் இலக்கணிகளின்படி

1. வினையை உணர்த்தும் பெயர்களாக வருவன
2. படர்க்கை இடத்தே வரும்
3. முதனிலை இல்லாமலும் வரும்
4. பெயரெச்சமாகவும், வினைமுற்றாகவும் வருவன எனக்கொள்ளலாம்

"பெயர் நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழில் நிலை ஒட்டும் ஒன்றலங்கடையே" (தொல்.சொல்.71)

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை எழுதும் உரைகாரர்கள் தொழிற்பெயர்கள் குறித்துக் குறிப்பிடுகின்றனர். இளம்பூரணர்,

"பெயர்ச் சொல் காலந்தோன்றா; தொழிற்பெயராயின் காலம் தோன்றும்"

"அற்றன்று, பெயர்ச்சொல் காலந்தோன்றா எனவே, தொழிற்பெயர் காலத் தோன்றுதலும் தோன்றாமையும் உடைய என்பதாம்" என்ற கருத்துகளை முன் வைக்கிறார். எனவே இளம்பூரணர் உரைப்படி, தொழிற்பெயரில்

1. காலம் தோன்றும் தொழிற்பெயரும் (வினையாலணையும் பெயர்)
2. காலம் தோன்றா தொழிற்பெயர்

என இருவகைகளில் அமைதலைக் காணலாம். இதுபோலவே சேனாவரையரும் இனம்பூரணரைப் போன்று இந்நூற்பா உரையில் தொழிற்பெயரில் காலந்தோறும் தொழிற்பெயர் (வினையாலனையும் பெயர்), காலந்தோன்றா தொழிற்பெயர் என இருவகையில் அமைவதைக் குறிப்பிடுவார்.

நச்சினார்க்கினியரும் நூற்பா உரையில்,

| | | |
|---|---|---|
| "பெயர்க்கிளவி | – | பெயர்ப்பெயாராகிய சொல்லும், |
| நிலைக்கிளவி | – | அப்பெயரது நிலையிலே நிற்றலை உடையச் சொல்லும், |
| காலம் தோன்றா | – | காலம் தோன்றாவாய் நிற்கும் |

தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங்கடையே – ஒரு பொருளது புடைப்பெயர்ச்சியாய்க் காலந்தோன்றுதற்குப் பொருந்தும் ஒரு கூற்றுத் தொழிற்பெயர் அல்லா இடத்து". மேலும் இளம்பூரணரும், சேனாவரையரும் பெயரில் இரண்டு வகை இருப்பதனைக் கூற, நச்சினார்க்கினியர், தொழிற்பெயரில் இரண்டு வகை இருப்பதனையும் விளக்குகிறார். இதனை, புடைப்பெயர்ச்சி மாத்திரம் உணர்த்தி நிற்கும் உண்டல், திண்றல் என வரும் வினைப்பெயரும், பூசல், வேட்டை என்றாற் போலப் புடைப்பெயர்ச்சியை விளக்காது நிற்கும் வினைப்பெயரும், என்று குறிப்பிடும் கூற்றின் மூலமாகத் தொழிற்பெயரில்,

1. வினைத் தொழிற்பெயர்
2. பொருள் தொழிற்பெயர்

என இரண்டு வகைகள் இருப்பதனை அறிய முடிகிறது. இவருக்கு அடுத்து வந்த கல்லாடர் நச்சினார்க்கினியர் கருத்தினை ஒட்டியே உரை எழுதி உள்ளமையைக் காணமுடிகிறது.

கல்லாடனார், இந்நூற்பாவிற்கு, "பெயர்தாம் பெயர்ப்பெயரும், தொழிற்பெயரும் என இருவகைப்படும். பெயர்ப்பெயராவன சாத்தன், கொற்றன் என ஒரு தொழிலால் பெயர் அன்றி அவ்வப் பொருட்டு இடுகுறியாய் வருவன. இவை காலந்தோன்றா" என உரைச்சுட்டுவார். தொழிற்பெயராயின் தோன்றும் தொழிற்பெயர் தாமும் தொழிலின் மேல் நின்ற தொழிற்பெயரும், பொருள்மேல் நின்ற தொழிற்பெயரும் என இரு வகைப்படும். அவற்றுள் தொழிலின் மேல் நின்றனவும் காலந்தோன்றா. அவை உணல், தினல் எனப் பொருளது புடைப்பெயர்ச்சியை அறிவித்து நிற்கும் என்பது. இவற்றைப் பூசை, வேட்டை என்றாற் போல்வன வினைச்சொற்கு அடியாய்ப் புடைப்பெயர்ச்சியை விளக்காது பெயர்ப்பெயரே போல் நிற்பனவும் உள என்பது" என உரை தருவார்.

தெய்வச்சிலையாகும் பெயர் நிலைமையுடைய சொல், காலம் தோன்றா. தொழில் நிலையோடு ஒட்டி நிற்கும் பெயரும் ஒரு வகையல்லன காலம் தோன்றா" எனக் கூறி தொழிற்பெயரில் இரு வகைகள் உள்ளமையைத் தெளிவுறுத்துவார். எனவே, தொல்காப்பிய உரைகாரர்களின் வழித் தொழிற்பெயர்கள்,

1. காலம் உணர்த்திய தொழிற்பெயர்கள்
2. காலம் உணர்த்தாத தொழிற்பெயர்கள்

என இரு வகைகள் உள்ளமையை உணரலாம்.

**விகுதி பெற்றத் தொழிற்பெயர்**

வினையடிச் சொல்லோடு விகுதிகளைச் சேர்க்க தொழிற்பெயர் வடிவம் தோன்றும். இது விகுதி பெற்றத் தொழிற்பெயர் எனப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| வினைஅடிச்சொல் | + | விகுதி | – | தொழிற்பெயர் |
| செய் | + | தல் | – | செய்தல் |
| ஆடு | + | அல் | – | ஆடல் |

**முதனிலைத் தொழிற்பெயர்**

தொழிற்பெயர் விகுதிகளை இல்லாமல் பகுதி மட்டும் வந்து தொழில் ஆவதற்கு முதனிலைத் தொழிற்பெயர் எனப்படும். சான்று: பிடி, அணை, பொரி, புகழ், நிரை

**முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்**

பகுதிகள் மட்டும் அமைந்த முதனிலைத் தொழிற்பெயர்கள் சில இடங்களில் திரிந்து வருவதனை முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் எனலாம். சான்று: சுடு — சூடு, உண் – ஊன், ஊறு – ஊற்று, பொரு – போர்

**காலம் உணர்த்தும் தொழிற்பெயர்**

'து' விகுதி 'மை' விகுதி பெற்றவை காலம் உணர்த்தும் தொழிற்பெயராகும். சான்று: நடத்தது, நடக்கிறது, நடந்தமை, வந்தமை

**காலம் உணர்த்தாத தொழிற்பெயர்**

வினைப்பகுதியோடு தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, வு, சி, து முதலான விகுதிகளைப் பெற்று வருவன. சான்று: வருகை, பார்வை, படைப்பு, கல்வி, சாக்காடு, கோட்பாடு,

**எதிர்மறைத் தொழிற்பெயர்**

அஞ்சாமை, மறவாமை, எள்ளாமை, நில்லாமை, அறியாமை,

தமிழில் தொழிற்பெயர்கள், முதனிலைத் தொழிற்பெயர், முதனிலை நீண்ட தொழிற்பெயர், விகுதி பெற்றத் தொழிற்பெயர் என மூன்று நிலைகளில் அமைகின்றது.

தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உள், இல், தி, சி, வி, வு, இ, து, மை, து, காடு, பாடு, முதலிய விகுதிகள் பெற்று வரும்.

தொழிற்பெயர் காலம் உணர்த்தியும், காலம் உணர்த்தாமலும், எதிர்மறையாகவும் வரும்.

அல்ஈற்றுத் தொழிற்பெயர்கள் மெல், இடை, வல்லினை அடிகளோடு வரும்.

தமிழில் தொழிற்பெயர்கள் குறித்து இலக்கணிகள் விரிவாகப் பேசவில்லை, தொல்காப்பியம் தொடங்கிய ஆரம்பகால இலக்கணநூற்கள் தொழிற்பெயர்கள் குறித்து சில செய்திகளையே பேசுகின்றன; விரிவான இலக்கணம் சுட்டவில்லை. பிற்கால இலக்கண நூற்களான தமிழ்நூல், தமிழ்க்காப்பு இயம் போன்ற இலக்கணநூற்கள் தொழிற்பெயர்கள் குறித்து விரிவாகப் பேசுகின்றன.

தொல்காப்பியம் முன்மொழிந்த தொழிற்பெயர்கள் அதற்குப் பிந்திய இலக்கண நூற்களான நன்னூல், முத்துவீரியம், சுவாமிநாதம், இலக்கணக்கொத்து, தமிழ்நூல், தமிழ்க்காப்பு இயம் போன்றன காலமாற்றத்தினால் ஏற்பட்ட மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் பதிவு செய்தமையின் மேற்கண்ட நூற்பாக்களின் வழி தெள்ளிதின் அறிய முடிகின்றது. இலக்கண உலகில் மொழிநிலையில் ஏற்படும் இவ்வகை மாற்றங்கள், வளர்ச்சிகள், புதிய போக்குகள் போல்வனவற்றைத் தொடர்ந்து காணுவது, பதிவு செய்வது பிற்கால மொழி ஆய்வுகளுக்குப் பெரிதும் பயன்படும்.

**துணைநின்ற நூல்கள்**

1. மரபிலக்கண நூற்களும் உரைகளும்
2. இசரயேல்.மோ., 1976, இலக்கணஆய்வு – பெயர்ச்சொல், சிந்தாமணி வெளியீடு, மதுரை.
3. இசரயேல்.மோ., 1976, இலக்கணஆய்வு – வினைச்சொல், சிந்தாமணி வெளியீடு, மதுரை.
4. சண்முகம்.செ.வை., 1986, சொல்லிலக்கணக் கோட்பாடு (2) அனைத்தியந்திய தமிழ் மொழியியற் கழகம், சென்னை.
5. தேவநேயப்பாவாணர்.நா., 1940, இயற்றமிழ் இலக்கணம், தமிழ்மண் பதிப்பகம், சென்னை.
6. வேலுப்பிள்ளை.ஆ., 1979, தமிழ் வரலாற்றிலக்கணம், பாரி புத்தகப்பண்ணை, சென்னை.

# தமிழகத்தில் ஜல்லிக்கட்டு எழுச்சி எனும் தை புரட்சி - மீள்பார்வை

முனைவர் கி. ஜெகதீசன்
உதவிப் பேராசிரியர்
விலங்கின மரபியல் மற்றும் இனவிருத்தித் துறை
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும்
ஆஜ்ராய்ச்சி நிலையம், ஒரத்தநாடு

ஜல்லிக்கட்டு! அப்படியென்றால் என்ன? அது எப்படி தமிழக மக்களை ஒன்றுகூடிப் போராட செய்து வெற்றியையும் பெறச்செய்தது? ஜல்லிக்கட்டு வேண்டுமென்பதற்கு சொல்லப்படும் காரணங்கள் என்னென்ன? பண்பாடா? உரிமையா? நாட்டின் மாடுகளின் பாதுகாப்பா? விவசாயிகளின் வாழ்வாதாரமா? அந்நிய நாட்டின் வர்த்தக தந்திரமா? அதைப்போல ஜல்லிக்கட்டின் மீதான தடைக்கு காரணங்கள் என்னென்ன? விலங்கு வதையா? மூட நம்பிக்கையா? அல்லது வேறு காரணங்களா?



அண்மையில் ஜல்லிக்கட்டை ஒட்டிய வெவ்வேறு பரிமாணங்களில் அனல் பறக்கும் விவாதங்களை ஊடகதளங்களில் பார்க்க முடிந்தது. ஜல்லிக்கட்டையும், அதனையொட்டிய சில கேள்விகளையும் எப்படி புரிந்து கொள்வது? உணர்வின் அடிப்படையில் மட்டுமா அல்லது அறிவியலின் அடிப்படையில் மட்டுமா அல்லது இண்டையும் சேர்த்தா?

ஒரு நாடு எப்படி வழிநடத்தப்பட வேண்டும்? அதன் அரசியலமைப்புச் சட்டம் மூலமே! அது தவறாக இருக்கும்பட்சத்தில் அதனைத் தகுந்த ஆதாரங்கள் மூலம் நிரூபணம் செய்து முறையாக மாற்ற வேண்டும். எழுபது வயதைக் கொண்ட இந்தியாவிற்கு அரசியல் சாசனத்திலுள்ள அனைத்துக் குறைகளையும் களையெடுப்பதற்கு தேவையான கால அவகாசம் போதவில்லை என்பதே உண்மை. அதைப் போலவே தவறான சட்டத்தையும் இயற்ற இந்தியா தவறவில்லை. இதற்கு காரணம் ஆட்சியாளர்கள் சிக்கலான, பண்பாட்டைப் பின்புலமாகக் கொண்டுள்ள இந்தியாவைச் சரிவரப் புரிந்துக் கொள்ள தவறியதே ஆகும்.

பண்டையகால வாழ்க்கைமுறையை புரிந்துக்கொள்ள உதவும் ஓர் வழி சங்க இலக்கியத்தைப் புரிந்து கொள்வதேயாகும். இன்று நாம் வாழும் முறையை அறிவியல்பூர்வமாக தவறு என்று மும்முறை நிருபணம் செய்யும் வரையில் நாம் மரபுவழி முறையைக் கையாளுவதே சிறந்ததாகும். பண்பாடு என்பது ஓர் வாழ்க்கைமுறை. அது நீண்ட நெடிய பயணத்தைக் கொண்டது. அதை ஓர் இரவில் அரசியல் சட்டத்தின் மூலம் தடை செய்ய முடியாது; தடை செய்யவும் கூடாது. அது தவறாக இருக்கும்பட்சத்தில்கூட அதை மக்களின் விழிப்புணர்வு, மனமாற்றம் மூலம் மெதுவாக சரியான திசை நோக்கி மாற்ற வேண்டும். அதிகாரத்தின் மூலமும், மேட்டிமை வாதத்தின் மூலம் கலாச்சாரத்தை அழிக்க முற்படும்போது மக்கள் பொங்கி எழுவார்கள் என்பது தவிர்க்க முடியாதது. அப்படி ஏற்பட்ட ஓர் அறச்சீற்றம்தான் தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டிற்காகக் கூடியது!



சரி! ஜல்லிக்கட்டை ஒவ்வொரு கோணமாக அறிய முற்படலாம்.

**ஜல்லிக்கட்டில் காளைகள் துன்புறத்தப்படுகின்றனவா?**

இந்த கேள்விக்குப் பதில் சொல்லும் முன் ஜல்லிக்கட்டு விளையாட்டு எப்படி கொண்டாடப்படுகிறது என்பதை அறிய வேண்டும். ஜல்லிக்கட்டில் பயன்படுத்தப்படும் காளைகள் காயடிக்கப்படாதவையாகும். எனவே பங்கேற்கும் காளைகள் ஆவேசமாக இருக்கும். இதற்குக் காரணம் டெஸ்டோஸ்டீஸ்வரன் என்னும் ஹார்மோன் ஆகும். இது காளையை வீரியத்துடன் வைத்திருக்கும். காளையை கட்டுக்குள் வைத்திருப்பதென்பது வளர்ப்பவரைத் தவிர மூன்றாம் மனிதருக்கு வசப்படாத ஒன்று. இப்படி வசப்படுத்தப்படாத காளையை வசப்படுத்த முயலுவதுதான் ஜல்லிக்கட்டு விளையாட்டிலுள்ள பிரதான சவால். ஜல்லிக்கட்டுக்கு பயன்படுத்தப்படும் காளைகளின் வயது பெரும்பாலும் 2 முதல் 7 வயதுக்குள்ளாகவே இருக்கும். இந்த வயதில் காளைகளின் உடல் எடை சுமார் 350 முதல் 500 கிலோ வரை இருக்கும்.

ஜல்லிக்கட்டுக்குக் காளையை தயார் செய்வதென்பது ஓர் கலை. காளையைக் கன்று பருவத்திலேயே அடையாளம் கண்டு அவற்றிற்கு சிறப்பான மேலாண்மையை முதல் இரண்டாண்டுகளில் அளிக்க வேண்டும். அப்போதுதான் வயதிற்கேற்ற உடல் எடையும், வீரியமும் காளைகளுக்கு ஏற்படும். இதைத்தவிர ஜல்லிக்கட்டில் திறம்பட செயல்பட அதற்குத் தினந்தோறும் பயிற்சியளிக்க வேண்டும். ஜல்லிக்கட்டில் பயன்படுத்தப்படும் காளையின் கொம்பின் நீளம் குறிப்பிட்ட கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டுமென்பது முக்கியமான அம்சமாகும். ஜல்லிக்கட்டு காளைகளை மக்கள் கூட்டம் அறியாமல் தனித்து ஒதுக்குப்புறம்பாக கொட்டகையில் வளர்க்க வேண்டும். அப்போதுதான் ஜல்லிக்கட்டில் கூட்டத்தைப் பார்த்துக் காளை மிரளும். மாடுபிடி வீரர்களுக்கு அது கூடுதல் சவாலாக இருக்கும். ஜல்லிக்கட்டில் அவிழ்த்துவிடப்படும்

காளையின் உடம்பில் எந்தவொரு கயிறும் கட்டப்பட்டு இருக்கக் கூடாது மூக்கணாங்கயிறு உட்பட. மாடுபிடி வீரர்களுக்கு உள்ள ஒரேயொரு பிடிமானமென்பது காளையின் பெருத்த திமில் ஒன்றேயாகும். திமிலை விட்டால் கொம்புகளைப் பிடிக்கலாம். ஆனால் காளையின் கொம்புகளை தொடலாமேயொழிய பிடிக்க முடியாதென்பதே நிதர்சனம். விளையாட்டில் பங்குபெறும் ஒவ்வொரு காளையும் கால்நடை மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, விளையாட்டில் பங்குபெற தேவையான உடல்திறன் சான்றிதழ் பெற வேண்டும். இது கட்டாயம். அதைப்போன்றே மாடுபிடி வீரர்களும் ஜல்லிக்கட்டு அன்று உடற்பரிசோதனைக்கு உட்படுத்தப்படுபவர். அவர்களும் தேர்ச்சி பெற வேண்டும். பொதுவாக மாடுபிடி வீரர்கள் என்பவர்கள் சிறு வயதிலிருந்தே தங்களை மாடு பிடிக்க பயிற்சியில் ஈடுபடுத்திக் கொள்வார்கள். இதற்காக பிரத்யோக அனுபவமுள்ள பெரியோர்கள் அந்தந்த பகுதிகளில் உள்ளனர். மாடுபிடி வீரர்களுக்கும் வயது, உடல் எடை, அனுபவம் போன்றவற்றின் அடிப்படையிலேயே அனுமதிக்கப்படுவார்கள். இவ்வாறாக காளைகளும், காளையர்களும் ஜல்லிக்கட்டு விளையாட்டு குழுவால் முறைப்படி கண்காணிப்பதற்கு உட்படுத்தப்பட்டு களமிறக்கப்படுவார்கள்.

களத்தில் ஒவ்வொரு காளையாக வாடிவாசல் எனப்படும் நுழைவாயில் வழியாக அவிழ்த்துவிடப்படும். ஒவ்வொரு காளைக்கும் பெயருண்டு. அதன் பெயரும், காளையின் சொந்தக்காரரின் பெயரும் ஒலிப்பெருக்கியில் அறிவிக்கப்படும். மேலும் காளையை அடக்கும் வீரருக்கு கிடைக்கப்போகும் சன்மானம் பற்றியும் அறிவிக்கப்படும். இதைத் தவிர இதுவரை காளை பங்குபெற்ற ஜல்லிக்கட்டின் எண்ணிக்கை, வென்ற விபரம் போன்றவற்றையும் பெருமையாக அறிவிப்பார்கள். பொதுவாக ஒவ்வொரு மாடுபிடி வீரரும் தனிப்பட்ட முறையிலோ அல்லது ஒரு குழுவாகவோ சேர்ந்து காளைகளை அடக்குவதற்குத் தங்களை தயார்படுத்திக் கொள்வார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால் போட்டியில் பங்குபெறும் ஒவ்வொரு காளையும் அதன் குணாதிசயங்களில் வேறுபட்டு இருப்பதேயாகும். எனவே காளைகளை அணைவதற்கான திட்டமிடலும், சாதுர்யமும் எல்லா காளைகளுக்கும் ஒரே மாதிரியாகக்கொள்ள முடியாது. ஆகவே, ஒரு மாடுபிடி வீரர் எல்லா காளைகளையும் குறி வைத்து அணைய முடியாது. இது தான் கள உண்மையும்கூட!

ஒவ்வொரு பகுதியிலும் சில எண்ணிக்கையிலான காளைகள் மிகவும் பிரசித்திப் பெற்றவையாகவும், அணைவதற்கு சவாலானதாகவும் இருக்கும். இந்த காளைகளைக் குறி வைத்தே மாடுபிடி வீரர்கள் தங்களை தயார் படுத்துவார்கள். இந்தக் காளைகளை அணைவர்களுக்கு கிடைக்கப்போகும் சன்மானம் மற்ற காளைகளை ஒப்பிடும்போது மிகவும் அதிகமாகவும் இருக்கும். இந்த காளைகளை வளர்ப்போர் பெரும்பாலும் அந்தப் பகுதியில் உள்ள பேர்போன தலைமுறையாக தங்களை ஈடுபடுத்தி வருபவர்கள். இவர்களுக்குக் காளையை கண்டறிவதிலும், அவற்றை வளர்ப்பதிலும், பயிற்சியளிப்பதிலும் நுண்ணறிவு அதிகமாக இருக்கும்.

காலப்போக்கில் இந்தப் பரம்பரை காளை வளர்ப்போருக்கு தன் காளையை யாரும் அடக்கிவிடக் கூடாதென்றும், அவ்வாறு அடக்கிவிட்டால் அது தனக்கேற்பட்ட அவமானமென்றும், அதனால் தங்களின் செல்வாக்கு சுற்றுவட்டப் பகுதியில் குறையுமென்றும் நினைத்து தங்களின் காளையை அடக்கிவிட முடியாதவாறு காளைகளுக்கு முறையற்ற துன்பத்தை ஏற்படுத்தி காளையை செயற்கையாக ஆத்திரமூட்டுவார்கள். அதற்காகக் காளையின் வாலைக் கடிப்பது, காளையின் குதத்தைக் கத்தியால் கீறி மிளகாய் தூள் தூவுவது, காளையின் நாக்கில் மிளகாய் தூள் தேய்ப்பது, கண்களில் மிளகாய் தூள் தூவுவது, சாராயம் புகட்டுவது போன்ற செயல்களில் ஈடுபடுவார்கள். இந்தச் செயல்கள் காளைகளுக்கு தேவையற்ற துன்பத்தை உள்ளாக்குகின்றன என்பதில் கடுகளவும் சந்தேகமில்லை. இந்தச் செயல்களைக் கண்டித்தும், காரணமாக காட்டியும் மிருக நல ஆர்வலர்கள் நீதிமன்றம் சென்று ஜல்லிக்கட்டு விளையாட்டிற்கு தடை கோருகிறார்கள்.

எந்தவொரு விளையாட்டையும் போன்றே ஜல்லிக்கட்டிலும் சிலர் முறைதவறிச் செயல்படுகிறார்கள். அவர்களை அடையாளம்கண்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமென்பது ஜல்லிக்கட்டு விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் கடமையாகும். ஆனால் விதிவிலக்காக நடைபெறும் சம்பவங்களின் அடிப்படையில் ஆட்சியாளர்கள் ஜல்லிக்கட்டிற்கெதிராக சட்டமியற்றுதலோ, அல்லது தவறான சட்டத்தின் அடிப்படையில் நீதிமன்றம் ஜல்லிக்கட்டிற்கு முற்றிலும் தடை விதிப்பதோ அறமல்ல!

வாடிவாசலில் அவிழ்ந்துவிடப்படும் காளையானது அதிகபட்சமாக 100 மீட்டர் தூரத்தை மட்டுமே கடக்க வேண்டியிருக்கும். காளையானது இந்தத் தூரத்தைப் பொதுவாக ஓரிரு நிமிடத்தில் பாய்ந்து கடந்து விடும். சில காளைகள் அதிகபட்சமாக இரண்டு முதல் மூன்று நிமிடங்கள் களத்தில் சுழன்று, மாடு பிடி வீரர்களுக்குச் சவாலைத் தரும். போட்டியும் விறுவிறுப்பாக அமையும். ஒரு காளையை இரண்டு நபர்கள் மட்டுமே தொடர்ந்து அணைந்து குறிப்பிட்ட தூரம் கடக்க முடியும். அந்தத் தருணத்தில் காளையானது அதிகபட்சமாக 150 கிலோ உடல் எடையை மட்டுமே சுமக்க வேண்டியுள்ளது. அதுவும் சில வினாடிகள்தான். ஜல்லிக்கட்டு விளையாட்டு, தேங்காய் நார் பரப்பிய களத்தில்தான் நடைபெறும். எனவே முறைப்படி நடத்தப்படும் ஜல்லிக்கட்டில் காளைகளுக்கோ, காளையர்களுக்கோ துன்பம் இழைக்கப்படுவதில்லை என்பதே கள நிலவரமும் உண்மையும்கூட.



சில நேரங்களில் பார்வையாளர்களுக்கான தடுப்பு சரியான உயரத்தில் அமைக்கப்பட்டால் இருக்கும்பட்சத்தில் கூட்டத்தைப் பார்த்துப் பயம் கொண்ட காளையானது துள்ளிக் குதித்துப் பார்வையாளர்களைப் பதம் பார்க்கும். சில நேரங்களில் மாடுபிடி வீரரோ அல்லது பார்வையாளரோ முறையான

பாதுகாப்பு வசதிகளும், மருத்துவ வசதிகளும் இல்லாமல் முன்னெச்சரிக்கையின்றி இறக்க நேர்வதுவும் உண்டு. இதனைத் தவிர்க்கவே வழிகாட்டும் நெறிமுறைகள் ஆண்டுதோறும் கடினமாக்கப்பட்டு வருகின்றன. நீதிமன்ற அறிவுறுத்தலின்படி ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியானது மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் உள்ள ஒரு குழுவால் கண்காணிக்கப்பட்டும், விளையாட்டு முழுவதும் கேமராவில் படம் பிடிக்கப்பட்டும் வருகின்றது. இதையெல்லாம் வைத்து பார்க்கும்போது ஜல்லிக்கட்டு விளையாட்டானது அரசு விதித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி நடத்தும்போது காளைகள் துன்பத்திற்குள்ளாக்கப்பட இல்லையென்பதும் வழிகாட்டு விதிமுறைகள் மீறப்படும்போது காளைகள் மட்டும் இல்லாமல் மனிதர்களும் துன்பத்திற்குள்ளாக்கப்படுகிறார்கள் என்பதுமே உண்மை.

ஜல்லிக்கட்டிற்குத் தடை கோருபவர்கள் விளையாட்டின் விதிவிலக்கை எடுத்துக்காட்டாக கொள்வதுவும், ஜல்லிக்கட்டை ஆதரிப்போர் விதிவிலக்காக நடைபெறும் நிகழ்வைக் கண்டுகொள்ளாமல் இருப்பதுவும் சரியல்ல!

**மிருக நல ஆர்வலர்களம், காளை வளர்ப்போரும், கால்நடை அறிவியலும்**

ஜல்லிக்கட்டு விளையாட்டில் காளைகள் துன்பப்படுத்தப்படுகிறது, காளைகள் பயத்திற்குள்ளாக்கப்படுகிறது, காளைகள் மீது மாடுபிடி வீரர்கள் பாய்ந்து காளைகளுக்குச் சுமையை ஏற்றுகிறார்கள், காளைகளின் கண்களில் மிளகாய் பொடி தூவுவது, வாலைக் கடிப்பது, சாராயத்தை ஊட்டுவது, இன்னபிற செயல்கள் மூலமும் துன்பத்திற்க்குள்ளாக்குகிறார்கள் என்பவை மிருக நல ஆர்வலர்களால் கூறப்படுகின்ற சில குற்றச்சாட்டுகள். எனவே ஜல்லிக்கட்டை தடை செய்ய வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கை.

காளையை வளர்க்கும் எங்களுக்கு தெரியாதா? எது துன்பம் என்று! வருடம் முழுவதும் கண்ணுக்கு கண்ணாக, குடும்பத்தில் ஓர் உறுப்பினராக சில நேரங்களில் எங்களைவிட அதிக கவனமாக காளையைப் பராமரித்து வருகின்றோம். அதனைத் துன்பத்திற்கு உள்ளாக்குவதற்கு நாங்கள் எப்படி விழைவோம்? இந்த ஜல்லிக்கட்டு விழாவினை முன்னிட்டே ஒவ்வொரு பகுதியிலும் ஆங்காங்கே உள்ள நாட்டின் காளைகளை அந்தந்தப் பகுதி மக்கள் வளர்க்கின்றார்கள். ஜல்லிக்கட்டு விளையாட்டு காளைகளின் வீரியத்தை சோதனை செய்யும் முயற்சியாகவும் கொள்ளலாம். யாராலும் அணைக்க முடியாத காளை சிறந்த காளையாகக் கண்டறியப்பட்டு, அந்தக் காளையானது அந்தப் பகுதிகளில் சிறந்ததாக ஏற்றுக் கொள்ளப்படும். ஒரு குறிப்பிட்ட வயதிற்கு பிறகு இந்த காளையானது இனவிருத்திக்கு பயன்படுத்தப்படும். இவ்வாறாக நாட்டின மாடுகள் அழியாமல் பாதுகாக்கப்படுகின்றது என்பது ஜல்லிக்கட்டு ஆதரவாளர்களின் முழக்கமாயிருக்கிறது.

ஜல்லிக்கட்டு விளையாட்டு என்பது தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும் கலாச்சார விளையாட்டல்ல. அது பெரும்பாலும் தென் மாவட்டங்களில் குறிப்பாக மதுரை மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள மாவட்டங்களில் மட்டுமே விமர்சையாக கொண்டாடப்படுகிறது. ஜல்லிக்கட்டிற்காகப் பயன்படுத்தப்படும் காளைகள் பெரும்பாலும்

புலிக்குளம் என்னும் மாட்டினமே ஆகும். இது மதுரை, சிவகங்கை மாவட்டங்களில் விரவிக் காணப்படுகின்றது.

புலிக்குளம் மாட்டினத்தைக் கலப்பின மாடுகளை போன்று வீடுகளில் ஒரு சில எண்ணிக்கையில் வளர்க்க முடியாது; வளர்க்கப்படுவதுவுமில்லை. இதற்குக் காரணம் இம்மாட்டினத்தை மக்கள் வீட்டு விலங்காக வளர்க்கவும், வசப்படுத்தவும் ஆர்வம் காட்டவில்லை என்பதே ஆகும். ஆகையால் இம்மாட்டினத்தை உழவிற்கோ, வண்டி இழுப்புக்கோ பயன்படுத்துவதும் மிகக் குறைவே. மேலும் புலிக்குளம் மாட்டிலிருந்து கிடைக்கும் பாலின் அளவும் மிகவும் குறைவே. புலிக்குளம் இனம் மாடானது பெரும்பாலும் நாடோடி கூட்டம் போல் தான் வளர்க்கப்பட்டு வருகின்றது. தென் தமிழகத்தில் இந்த மாட்டை வளர்க்கும் குடும்பத்தின் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணிவிடலாம். இவர்கள் இந்த இன மாடுகளைப் பரம்பரைபரம்பரையாக வளர்த்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் சமுதாயத்தில் ஒரு சில சாதிகளை சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும். இவர்களுக்குப் பெரிதாக நிலபுலம் கிடையாது. இவர்கள் பெரும்பாலும் கல்விப் பின்புலமின்றி இந்த மாட்டை மட்டுடே நம்பி உள்ளார்கள். இந்த மாட்டை கிடைமாடாகவே இவர்கள் வளர்த்து வருகிறார்கள். இவர்கள் காளை கன்றுகளை ஜல்லிக்கட்டிற்காக விற்பதன் மூலமும் வருவாய் ஈட்டுகின்றனர். பசு மாட்டிலிருந்து ஒருபோதும் இவர்கள் பாலைக் கறந்து விற்பனை செய்வதில்லை. பசுவை இனவிருத்திக்காக மட்டுமே பயன்படுத்துகின்றனர். இவ்வாறாக ஜல்லிக்கட்டு விளையாட்டானது புலிக்குளம் மாட்டினத்தை வளர்ப்போருக்கு வாழ்வாதாரமாக விளங்குகிறது.

புலிக்குளம் மாட்டின இருப்பை அதன் பூர்வீக இடமான தென் தமிழகத்தில் உறுதி செய்வதன் மூலம் ஜல்லிக்கட்டு விளையாட்டானது பல்லுயிர் பெருக்கத்திற்கும் வித்திடுகின்றது. ஜல்லிக்கட்டு என்பது பண்பாட்டிற்கும், பல்லுயிர் பெருக்கத்திற்கும் உள்ள பிணைப்பிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஜல்லிக்கட்டு என்னும் கலாச்சார நிகழ்வை கால்நடை அறிவியல் என்னும் கண்கொண்டு எவ்வாறு உற்று நோக்குவது?

காளை துன்புறுத்தப்படுகிறதா? மிருகத்தைப் பொருத்தமட்டில் துன்பம் என்றால் என்ன? துன்பம் ஏற்படுத்தப்பட்டதென்பதற்கான குறியீடுகள் அல்லது சான்றுகள் எனப்படுபவை எவையெவை? ஜல்லிக்கட்டை தவிர சாதாரண நாட்களில் காளைகள் துன்புறுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் எவையெவை? காளைகளுக்குத் துன்பம் என்பதை எப்படி புரிந்துகொள்வது? துன்பம் என்பது எல்லாவித விலங்கினங்களுக்கும் ஒன்று தானே? சட்ட ரீதியான தடை காளைகளுக்கு மட்டும் ஏன்? மற்ற விலங்குகளுக்கு சட்ட ரீதியியலான தடையில்லை ஏன்? இப்படி அடுக்கடுக்கான கேள்விகள்! ஒவ்வொன்றாக அலசுவோம்! அறிய முற்படுவோம்!

மேலே சொன்னப்படி காளைகளின் வாலைக் கடிப்பது, மிளகாய் தூளைக் கண்ணிலோ, குதத்திலோ தூவுதல், சாராயம் புகட்டுதல் போன்ற செயல்கள் உடற்சார்ந்த துன்பங்களைக் காளைகளுக்கு ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

ஜல்லிக்கட்டில் மக்கள் கூட்டத்தைக் கண்டு காளை மிரண்டு ஓடுவதும், காளையின் மீது மாடுபிடி வீரர்கள் தாவி அணைதலும், காளையின்மீது கூட்டாகத் தொங்கி சில மீட்டர்கள் தூரம் பயணிக்க எத்தனிப்பதும் காளைகளுக்கு உடல்ரீதியாக பெரிய அளவில் துன்பத்தை ஏற்படுத்த வாய்ப்பில்லை. ஆனால் ஆர்பரிக்கும் மக்கள் கூட்டத்தினால் உண்டாகும் பயம் காரணமாகக் காளையின் உடம்பில் சில ஹார்மோன்கள் சுரக்கும். எடுத்துக்காட்டாக அட்ரீனலின் என்னும் ஹார்மோன். இதன் விளைவாகக் காளைக்கு இதயத் துடிப்பு அதிகரிப்பதுடன் தற்காலிக உடற் செயல் மாற்றங்களும் ஏற்பட வாய்ப்புண்டு.

ஜல்லிக்கட்டு வரலாற்றில் எந்தவொரு காளையும் களத்தில் இறந்ததாகத் தகவல் இல்லை. ஆனால் மனிதர்கள் இறந்திருக்கிறார்கள் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி நடத்தப்படும் ஜல்லிக்கட்டில் காளைகள் துன்பப்படுத்தப்படுகின்றன என்ற வாதம் மேட்டிமை வாதமே தவிர கள உண்மையல்ல என்பதே நிதர்சனம்!

இந்திய நாட்டிலுள்ள மொத்த தீவன உற்பத்தியானது மொத்தமுள்ள கால்நடைகளுக்கான தீவனத் தேவையில் 60 சதவீதம் மட்டுமேயாகும். அப்படி என்றால் என்ன? நாட்டிலுள்ள ஒவ்வொரு கால்நடையும் அரை வயிறே உண்கிறது. பட்டினியைவிட வேறுவொரு துன்பம் உண்டா? கால்நடைகள் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லும்போது உள்ளாக்கப்படும் துன்பத்தை விவரிக்க முடியாது! இது மட்டுமா! இறைச்சிக் கூடங்களில், கோயில்களில் இழைக்கப்படும் துன்பம் சொல்லி மாலாது. இவற்றையெல்லாம்விட முட்டைக் கோழிகள் கூண்டிற்ககுள் படும் துன்பத்தை விவரிக்க தமிழகராதியில் வார்த்தையில்லை!

துன்பத்திலெல்லாம் தலையாயது எதுவெனில் ஓர் விலங்கிற்குச் சுற்றி திரியும் சுதந்திரத்தைப் பறிப்பதுவேயாகும். கொட்டில் முறை கறவை மாடு வளர்ப்பு, கூண்டு முறையில் கோழி வளர்ப்பு, பரண்மேல் ஆடு வளர்ப்பு என்பவையெல்லாம் அறிவியல் முறையில் கால்நடை வளர்ப்பு என்ற பெயரில் இழைக்கப்படும் கொடுமையேயாகும். இவற்றிற்கெல்லாம் நாம் சொல்லும் சமாதானம், சாக்கு போக்கு என்னவென்றால் உணவிற்காக என்று!

மேற்குறிப்பிட்ட அறிவியல் வளர்ச்சி என்பதெல்லாம் உணவிற்காக என்பதைவிட இலாபத்திற்காக என்பதே கசப்பான உண்மை. தெரிந்தோ தெரியாமலோ பல்கலைக்கழகங்களும், அரசின் கொள்கைகளும் இதைத்தான் மாணவர்களுக்கும், மக்களுக்கும் போதிக்கின்றன. இதற்கு அடிப்படைக் காரணம் மரபு சார்ந்த கால்நடை வளர்ப்பு முறைகளைச் சரிவர பயிற்றுவிக்கப்படாததும், பயிலாததேயுமாகும்.

**சட்டமும், சமானியனும்**

ஜல்லிக்கட்டு நிகழ்விற்குத் தடையாக உள்ள சட்டம் என்னவென்றால் காளையைக் காட்சிப்படுத்தக்கூடாத விலங்கினங்கள் பட்டியலில் சேர்த்ததுதான். காட்சிப்படுத்தக் கூடாத விலங்கினங்களில் பட்டியலில் உள்ள விலங்குகளாவன: சிங்கம், புலி, கரடி, குரங்கு, சிறுத்தை, காளை. இப்பட்டியலில் காளையைத் தவிர மற்ற

விலங்குகள் சர்க்கஸ் எனும் கேளிக்கை, வேடிக்கை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்பட்டன. ஆனால் காளை என்பது பன்னெடுங்காலமாக விவசாயத்துடன், உழவர்களுடன் இரண்டற கலந்தது. இந்திய அரசு காளையை காட்சிப்படுத்தக்கூடாத பட்டியலில் சேர்த்ததுதான் அபத்தத்தின் உச்சம். ஒவ்வொரு வீட்டின் கொட்டகையிலும் காளைகள் வளர்க்கப்படுகின்றன. இவற்றைக் காட்சி பொருளாக வைத்து உழவர்கள் என்றேனும் பணம் சம்பாதித்துள்ளார்களா? ஜல்லிக்கட்டில்கூடப் பார்வையாளர்களுக்குப் பணம் வசூலிக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அப்படியிருக்கக் காளையை காட்சிப்படுத்தக் கூடாத பட்டியலில் சேர்த்ததன் அடிப்படை முகாந்திரம் என்ன? இது மேட்டிமை வாதத்தின் உச்சம். காட்சிப்படுத்தக்கூடாத விலங்கினங்கள் பட்டியலில் காளையைச் சேர்த்திருப்பதும், பசுவை விலக்கி வைத்திருப்பதும் என்ன காரணத்தினாலோ? பசுவைக் காட்சிப்படுத்தும் விலங்காகக் கருதலாமா?

எல்லாவற்றிற்கும் மேலாக ஆச்சரியம் என்னவென்றால் காட்சிபடுத்தக்கூடாத விலங்கினங்கள் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டிய நாய், குதிரை, யானை, ஒட்டகம் போன்ற விலங்குகள் இடம் பெறாததுதான். இன்று உலகம் முழுவதிலும் நாயை வைத்து பெரிய வணிகச் சந்தையொன்று இயங்கி வருகிறது. இதில் பெரும்பாலோர் படித்த, பணக்கார வர்க்கமேயாகும். குதிரைப் பந்தயம் மிகப் பெரிய சூதாட்டம். பணக்காரர்களாலும் தொழிலதிபர்களாலும் நடத்தப்படுகிறது. மற்றெந்த விலங்கினங்களை விடவும் குதிரைப் பந்தயத்தில் குதிரைக்கு அதிகளவில் துன்பம் இழைக்கப்படுகிறது. ஆனால் குதிரைப் பந்தயத்திற்கு எந்தவொரு தடையுமில்லை. காளைகளின் மேல் கரிசனம் காட்டும் மிருக நல ஆர்வலர்களுக்கும், ஆட்சியளார்களுக்கும் மேற்சொன்ன விலங்குகளின் மேல் கரிசனம் இல்லாமல் போனது ஏனோ?

இராணுவத்தில் நாய்களும், குதிரைகளும், கழுதைகளும் படாத துன்பமா, இந்தக் காளைகள் ஜல்லிக்கட்டில் அனுபவிக்கின்றன? நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரில் துன்பம் இழைக்கப்பட்டால் பரவாயில்லையா? அதுவும் வருடம் முழுவதிலும்! வெயிலிலும் மழையிலும்! காட்டிலும், மேட்டிலும்! குளிரிலும், பனியிலும்! அதுவே ஓர் நாளோ அல்லது வருடத்தில் ஒரு சில நாட்களோ காளையை ஜல்லிக்கட்டில் பயன்படுத்தினால் அது குற்றமா?

ஒவ்வொரு கோயிலிலும் யானைகள் சங்கிலியால் கட்டப்பட்டு வாசலில் யாசகம் செய்ய உட்படுத்தப்படுகிறது. அது துன்பமில்லையா அதற்கொரு சட்டமில்லையோ? தடையில்லையா! விலங்குகளைக் கட்டிப்போடுவதையும், கூண்டினுள்ளும், கொட்டகையிலும் வளர்ப்பதை ஆதரிக்கும் அரசியல் சட்டம், காளையை அவிழ்த்துவிட்டு துரத்திப்பிடிக்கும் ஜல்லிக்கட்டை மட்டும் தடை செய்வதை அபத்தத்தின் உச்சமாக கருதி அறச்சீற்றம் கொள்வதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?

விலங்குகளை எப்படியெல்லாம் பயன்படுத்த வேண்டுமென்பதை யார் தீர்மானிப்பது? வளர்ப்பவனா? ஆள்பவனா? காட்டில் வனவிலங்காக சுற்றித் திரிந்த மனித விலங்கு ஆற்றங்கரையோரம் ஆசுவாசப்பட்டபோது மிச்சம் மீதியை உண்ணவந்த

நோஞ்சான் விலங்குகள்தான் இன்றைய வீட்டு விலங்குகள், மனிதன் விலங்குகளை உணவிற்காகவும், உடைக்காகவும், பயணத்திற்காகவும், பேருந்தாகவும். பொழுதுபோக்குக்காகவும் எனப் பல்வேறு காரணங்களுக்காகப் பயன்படுத்தி வந்துள்ளான். வீட்டு விலங்கு எப்படி பயன்படுத்தப்பட வேண்டுமென்பதை வளர்ப்பவனின் அவசியங்களும், தேவைகளுமே தீர்மானிக்கின்றன. இந்த விலங்கை உணவிற்காகவும், அந்த விலங்கை விளையாட்டிற்காகவும் பயன்படுத்தக் கூடாதென்று சட்டமியற்றுவதற்கு பின்னாலுள்ள தார்மீகமென்ன?

அரசு கட்டுப்பாடும், வழிமுறைகளையும் ஏற்படுத்துவது தவறல்ல. அவையனைத்தும் விலங்குகளின் நலனில் மட்டுமே அக்கறை கொண்டதாக இருந்தால் அதில் எந்தவொரு முரணும் இருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் இயற்கையில் உணவுச் சங்கிலி என்ற ஒன்றுண்டு. அதன்படி ஓர் உயிரினம் உணவிற்காக மற்றொரு உயிரினத்தைச் சார்ந்து வாழவேண்டிய நிர்பந்தம் உள்ளது. அதிலும் மனிதனுக்கு விலங்கிலிருந்து உணவு மட்டுமல்ல வேறு சில உபயங்களும் தேவைப்படுகின்றன. மனிதனின் செயல்பாடுகள் விலங்கினத்தின அழிவிற்கோ, இனவிருத்திக்கோ அச்சுறுத்தலாக இருப்பின் அதைத் தடை செய்யலாம். தப்பில்லை. ஆனால் ஜல்லிக்கட்டு விவகாரத்தில் காளையின் உயிருக்கோ, அதன் இனவிருத்திக்கோ பங்கமேற்படும் படியான எந்தவொரு முகாந்திரமும் இல்லையென்பதுதான் உண்மை. இதனடிப்படையில் பீறிட்டெழுந்ததே தமிழகத்தில் ஏற்பட்ட ஜல்லிக்கட்டு எழுச்சி எனும் அறச்சீற்றம். ஜல்லிக்கட்டிற்கு இருந்த சட்டரீதியிலான தடை நீக்கப்பட்டுள்ளது என்பதைத் தமிழர்கள் மட்டுமல்ல, உலக மக்களனைவரும் வரவேற்றுள்ளார்கள்.

# வள்ளுவர் காட்டும் வேளாண்மை

**முனைவர் ஆ.பூபாலன்**
துணை முதல்வர் (ம) தமிழ்த்துறைத்தலைவர்
ஸ்ரீபாரதி மகளிர் கலை (ம) அறிவியல் கல்லூரி
குண்ணத்தூர், ஆரணி.

**முன்னுரை**

தமிழகத்தில் சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பட்ட பதினெட்டு நூல்கள் பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்கப்படுகின்றன. இந்நூல்கள் அறம், அகம், புறம் என மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளன. இதில் அறநூல் பதினொன்று. அக நூல் ஆறு, புற நூல் ஒன்று என்ற வகையில் அமைந்துள்ளன. திருக்குறள் அறநூல் வகையைச் சார்ந்தது ஆகும். இந்நூலின் ஆசிரியர் திருவள்ளுவர். குறளில் இடம் பெறும் உழவு குறித்த செய்திகளை அறிய முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**உழவு என்பதன் பொருள்**

சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில தமிழ் அகராதி உழவு என்பதற்கு வேளாண்மை, விவசாயம் என்று பொருள் விளக்கம் தருகிறது. தமிழ் தமிழ் அகரமுதலி உழவு என்பதற்கு உழவு நிலத்தை உழும் தொழில், வேளாண்மை, உடம்பினால் உழைக்கை என்று பல்வேறு விளக்கம் தருகிறது.

திருக்குறளில் உழவு என்ற அதிகாரம் 104 ஆவது அதிகாரமாக அமைந்துள்ளது. சிறுபான்மை வணிகர்க்கும், பெரும்பான்மை வேளாளர்க்கும் உரிதாய உழுதல் தொழில் செய்விக்குங்கால் ஏனையோர்க்கும் உரித்து என்பர் பரிமேலழகர். அக்கால நிலை அது போலும். ஆனால் திருவள்ளுவர் உழந்தும் உழவே தலை, சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் (1031) உழுவார் உலகத்தார்க்கு ஆணி (1032) உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் (1033) என்பர். அவர் உழவை மதித்தார் என்பதும் அரசரே உழவர்க்கு அடுத்தபடிதான் என்பதும் குறளாலேயே விளக்கமுறும் (1034).

உழவன் உலகின் உயிர், உழைப்பாளி காடு, கடல், நிலம், வணிகம் எனப் பல தளத்திலும் உழைப்பான், உயிர்களுக்கு அன்னையைப் போன்றவர் உழைக்கும் உழவரே (வெண்பாமாலை.344). போர்ப் படையைவிட ஏர்ப்படையே சிறந்தது. அரசரைவிட உழவரே சிறந்தவர் (பெரும்பொருள்). விளைவிக்கும் காலத்தில் விளைவிக்க வேண்டும். உழவர் குடிக்கு வேண்டாதது சூது. வேண்டுவென பார்ப்பாரைக் கண்டு எச்சரிக்கையாக

இருத்தல். உழவை விரும்பிப் போற்றுதல் (திரிகடுகம். 42). ஒரு நல்ல உழவன் நாள்தோறும் ஏரைப் போற்றுவான்; புன்செய் நிலத்தைத் திருத்துவான்; எருவிடுவான், கலப்பையால் நிலத்தை உழுது பண்படுத்துவான்; (சிறுபஞ்சமூலம்.52), உழவனுக்கு எருதுகள் இல்லாமை இன்னா. நிலத்தின் ஈரம் இல்லாமை இன்னா (இன்னாநாற்பது.4.). நிலத்தை உழுது விதைத்து நெற்பயிர் விளை (ஆத்திசூடி.82)– ஒருவரை வணங்கி வாழ்தலைவிட உழுது விழைத்து வாழ்தல் இனிது. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும். உழவு வழி வரும் செல்வம் குன்றாது (கொன்றை வேந்தன்.77). உழவு பணியே சிறந்தது. பிற பணி எல்லாம் பழுதுடையவை (நல்வழி.12). உழவர்க்கு அழகு தானே உழைத்து விளைத்த உணவை உண்ணுதல், உழுதொழிலைச் செய்து உணவு உண்ணாது வறிதே ஏழையாக இருப்போர் பதராவர்.

**உழவுத் தொழிலே சிறந்தது**

உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலைப் பின்பற்றியே நிற்கும். அதனால் எவ்வளவு துன்பமானாலும் உழவே சிறந்த தொழிலாகும் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். இதனை,

சுழன்றுஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை (குறள்.1031)

என்ற குறளின் வழி தெளிவுப்படுத்தியுள்ளார்.

**உழவர் அச்சாணி போன்றவர்**

உழவுத்தொழில் செய்யும் வலிமை இல்லாது பிற தொழில் செய்கின்றவரையும் தாங்குவதால், உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர் அவர் இதனை,

உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து (1032)

என்ற குறள் வெளிப்படுத்துகிறது.

உரிமையோடு வாழ்வர்

உழவு செய்து வாழ்வரே உரிமையோடு வாழ்வர். மற்றவர் பிறரைத் தொழுது அவர் பின் சென்று வாழ்வர். இதனை,

உழுதுண்டு வாழ்வரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் (1033)

என்ற குறள் வெளிப்படுத்துகிறது.

உழுது நெல்லை உற்பத்தி செய்யும் உழவர்கள், பல வேந்தரின் நிலங்களையும் தம் வேந்தரின் குடைக்கீழ் கொண்டு வருவார்கள் என்பதை,

பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர் (1034)

என்ற குறள் வெளிப்படுத்துகிறது. இதன் மூலம் நான்கு வருணத்தார்களில் (அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்) இரண்டு வருணத்தாரான அரசரும், வேளாளரும் இருந்த செய்தியை அறிய முடிகிறது.

**உழவர்கள் யாசிக்க மாட்டார்கள்**

கையினால் தொழில் செய்து உழைத்து உண்ணும் தொழிலாளர் பிறரிடம் சென்று யாசிக்க மாட்டார். தம்மை யாசித்தவருக்கு மறைக்காமல் கொடுப்பார். இதனை,

இரவார் இரப்பார்க்குஒன்று ஈவர் கரவாது
கைசெய்துஊண் மாலை யவர் (1035)

என்ற குறளின் வழி வெளிப்படுகிறது.

உழவரின் கைத் தொழில் செய்யாது, மடங்கி இருக்குமானால் பற்றற்ற துறவிகளுக்கு வாழ்வு இல்லை என்பதை,

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை (1036)

என்ற குறளின் வழி தெளிவுப்படுத்தியுள்ளார்.

**மண்ணைக் காயவிடல்**

நிலத்தை உழுபவன் ஒரு பலம் அளவுள்ள புழுதி கால் பலம் அளவு ஆகும்படி மண்ணைக் காயவிட்டால் அந்நிலப் பயிருக்கு ஒரு பிடி எருவும் இட வேண்டாமல் மிகுதியாக விளையும் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். இதனை

தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்ததுஎருவும்
வேண்டாது சாலப் படும் (1037)

என்ற குறளின் வழி அறியமுடிகிறது.

**எருவிடல்**

ஏர் உழுவதைவிடப் பயிருக்கு எரு விடுதல் நல்லது. இத்துடன் களை எடுத்தலும் பயிர் காத்தலும் நீர் விடுதலும் நன்மை தரும் என்கிறார் வள்ளுவர்,

ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்று அதன் காப்பு (1038)

என்ற குறளின் வழி குறிப்பிடுகிறார்.

**நிலத்திற்கு செய்ய வேண்டியது**

நிலச் சொந்தக்காரன் நாள்தோறும் நிலத்திற்குச் செய்ய வேண்டியதைச் செய்யாது சோம்பி இருப்பானால், அந்நிலம் மனைவி போலப் பிணங்கிவிடும் என்பதை,

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும் (1039)

என்ற குறளின் வழி புலப்படுத்தியுள்ளார் திருவள்ளுவர்.

பொருள் இல்லை என்று வறுமையால் சோம்பி இருப்பவரைக் கண்டால் அவனுடைய அறியாமையை நினைத்து நிலமகள் தன்னுள்ளே சிரிப்பாள் இதனை,

இலம்என்று அசைஇ இருப்பவரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும் (1040)

என்ற குறளின் வழி கூறியிருக்கிறார். இதன் மூலம் எப்போதும் நிலைத்து நிற்கும் தொழில் நிலத்தொழிலாகிய உழவுத் தொழில் செய்ய வேண்டும் என்பது புலப்படுகிறது.

**உழவனின் இலக்கணம்**

நல்ல உழவன் தன் நிலத்திலிருந்து கிடைக்கும் வைக்கோலைச் சேர்த்து வைத்திருப்பான். நாள்தோறும் உழுது ஏரைப் போற்றுவான், புன்செய் நிலத்தையும் திருத்துவான். எருவிடுவான் கலப்பையால் நிலத்தைப் பண்படுத்துவான். இதனை,

நன் புலத்து வை அடக்கி நாளும் ஏர் போற்றி
புன் புலத்தைச் செய்து எருப் போற்றிய பின் நன் புலக்கண்
பண் கலப்பை பாற்படுப்பான் உழவன் என்பவே
நுண் கலப்பை நூல் ஓதுவார் (சிறுபஞ்ச.58)

என்ற பாடலில் மூலம் உழவரின் இலக்கணத்தை அறியமுடிகிறது.

**வேளாளர்க்கு அழகு**

சூதாடிப் பொருள் சேர்க்க விரும்பான்மை, பார்ப்பனரைத் தீயாகக்கொண்டு மிக அகலாமை, மிக அணுகாமை, உழவுத் தொழிலை விரும்பிச் செய்தல் ஆகியன வேளாண் குடிக்கு அழகுகள் ஆகும். இதனை நல்லாதனார்,

கழகத்தால் வந்த பொருள் காமுறாமை
பழகினும் பார்ப்பாரைத் தீப்போல் ஒழுகல்
உழவின்கண் காமுற்று வாழ்தல் – இம் மூன்றும்
அழகு என்ப வேளாண் குடிக்கு (திரிகடுகம்.42)

என்ற பாடலின் வழி அறியலாம். மேலும் மற்றொரு பாடலில் உழும் போது சால் போகும் வழியை கவனிக்க வேண்டும் என்பதை,

சால் நெறிப் பாரா உழவனும் தன் மனையில்
.................................................................................
.....................................................இம்மூன்றும்
கடன் கொண்டார் நெஞ்சில் கனா (திரிகடுகம்.மி.பா.3)

என்ற பாடலின் வழி தெளிவுப்படுத்தியுள்ளார். உழவுத் தொழிலில் ஏர் பூட்டி பூட்டாமல் இருந்தால் அவன் உயிருடன் இருந்தாலும் இறந்ததிற்கு சமம் என்கிறார் நல்லாதனார்,

ஏர்க் குற்றம் பாரா உழவனும்...............................
.............................................................................

.......................................................,இம்மூவர்

இருந்திட்டு என்?போய் என், இவர்? (திரிகடுகம்.மி.பா.4)

என்ற பாடலின் வழி அறியமுடிகிறது.

நெற்பயிர் விளை (ஆத்திசூடி. 72)

நெற்பயிரை விடாது விளைத்திட வேண்டும்.

பூமி திருத்தி உண் (ஆத்திசூடி.82)

உன் விளைநிலத்தில் நீயே உழைத்து உணவை விளைத்து உண்பாயாக என்று குறிப்பிடுகிறது.

**முடிவுரை**

தமிழகத்தில் இன்றளவும் உழவுத் தொழில் சிறந்ததாகக் காணப்படுகிறது. உழவுத் தொழிலின் மூலம் விளையும் பொருட்களை உட்கொண்டு மக்கள் உயிர் வாழ்கின்றனர். இத்தகைய உழவின் சிறப்பை அற இலக்கியங்கள் எடுத்துரைத்துள்ளன, உழவு என்பதன் பொருள் பற்றியும், உழவு தொழிலே சிறந்தது என்றும், உழவர்களே உலகத்திற்கு அச்சாணிப் போன்றவர் என்றும் உழவுத் தொழில் செய்பவர்கள் அக்காலத்தில் உரிமை உடையவர்களாக கருதப்பட்டனர் என்பதைப் பற்றியும் இத்தொழில் செய்வதற்கு முன் மண்ணைக் கிளர்ந்து காய விட வேண்டும் என்பதைப் பற்றியும் வள்ளுவர் சுட்டியுள்ளார்.

**துணை நூற்பட்டியல்**

1. பாலசுந்தரம், ச, திருக்குறள் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம் சென்னை, 2000
2. இராமசுப்ரமணியம், எம்.ஏ (உ.ஆ), பதினென் கீழ்க்கணக்கு தொகுதி– 1 செல்லப்பா பதிப்பகம், மதுரை, 2009
3. இராமசுப்பிரமணியம், எம்.ஏ (உ–ஆ), பதினெண் கீழ்க்கணக்கு, தொகுதி – 3 செல்லப்பா பதிப்பகம், மதுரை, 1999.
4. பத்மதேவன், தமிழ்ப்பிரியன் (உ.ஆ), நீதி நூல் களஞ்சியம், கொற்றவை வெளியீடு, 2014

மலர் 2 இதழ் 1 ஜூலை, 2017 ISSN : 2454-3993

# சங்க இலக்கியத்தில் சமூகமும் அறமும்

மூ. சிந்து
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கற்பகம் பல்கலைக்கழகம்
ஈச்சநாரி

சங்க இலக்கியத்தைப் பொருத்தவரையில் புலவர்கள் தாங்கள் கண்ட காட்சிகளையும் பெற்ற அனுபவங்களையும் உள்ளது உள்ளவாறு படம் பிடித்துக் காட்டிச் சென்றுள்ளனர். சங்க இலக்கியங்கள் என்று கூறப்படும் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரின் வாழ்க்கையை எடுத்துக்காட்டுவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

சங்க இலக்கியங்கள் பொருளும், அருளும்கொண்ட மன்னர்கள், பொருளற்ற கலையுணர்வுகொண்ட புலவர்களை வரவேற்று இன்முகம்காட்டி விருந்திட்டுப் பொருள் கொடுத்து வறண்ட வாழ்வை வளமாக்கிய வரலாற்றை எடுத்துக்காட்டுகின்றன. கொடை, வீரம், காதல், புகழ், கல்வி ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு எழுந்தவையே சங்க இலக்கியங்கள் ஆகும். சங்க காலச் சமுதாயத்தில் தமிழர் வாழ்ந்த வாழ்க்கை, கொண்ட கொள்கை இவற்றின் கருவூலமாகத் திகழ்வது சங்கப் பாடல்களாகும்.

**அறம்**

அறம் – இல்லறம், துறவறம் என இருவகை. இல்லறம் – கொடுத்தலும், அளித்தலும், கோடலும், இன்மையும், ஒழுக்கமும், புணர்தலும், புணர்ந்தோரைப் பேணுதலுமாம். துறவறம் – துறவும், அடக்கமும், தூய்மையும், தவமும் அறவினையோம்பலும், மறவினை மறுத்தலும் பிறவுமாம் என்று அறத்திற்கு 'அபிதான சிந்தாமணி' பொருள் கூறுகிறது.

தமிழ் மொழி அகராதி 'அறம்' என்ற சொல்லுக்கு அறம், கையறம், தருமம், நீர்மை, பெரியோர் இயல்பில் ஒன்று என்று பொருள் சொல்கிறது.

**அறத்தின் அடிப்படை**

ஒருவனுடைய நினைவு சொல் செயல்களின் தீமையை அறுப்பதே அறம் என்னும் சொல்லுக்குப் பொருளாகப் பெறப்படும். ஒருவன் சொல்வனவும் செய்வனவும் எல்லாம் அவன் எண்ணும் எண்ணத்தின் வழியாகவேயன்றி வேறு வகையில் நடைபெறுதல் இயலாது என்று மறைமலையடிகள் அறத்திற்கு விளக்கம் கூறியுள்ளார்.

**வள்ளுவர் கண்ட அறம்**

அறம் எனப்படுவது ஒருவனது சொல், செயல்களின் உள்ளே சினத்துக் கிளம்பிய பொல்லாங்கினை அறுத்து அகற்றுவதற்கு முன் அவற்றிற்கு முதலான நினைவின்கண் சினங்கொண்ட தீய எண்ணத்தை அறுத்துக் களைவதாகும் என்னும் உண்மை புலனாகிறது.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற"

என்ற குறளில் எல்லா எண்ணங்களும் தோன்றுவதற்கு நிலைக்களமான ஒருவனது மனம் குற்றமின்றித் தூயதாக இருக்குமாறு ஒருவன் செய்துகொள்வதே அவனுக்கு அறமாகும். மனத்தூய்மையின்றி அவன் தன் சொல்லாலும் செயலாலும் அறம்போல செய்வன எல்லாம் அறமாதல் சிறிதுமில்லை என்று வள்ளுவர் கூறுகிறார்.

**சங்கச் சமூக நிலைப்பாடு**

சங்ககாலத் தமிழகம் கோனாட்சியைத் (கோ–அரசன்) தவிரப் பிறவகை ஆட்சியை அறிந்திருக்கவில்லை. சமூகத்தின் தலைவனாக மன்னனையே சங்க இலக்கியம் குறிப்பிடுக்கிறது.

"மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்"

என்பது மன்னனின் தலைமையின்றிச் சமுதாயம் சீராக இயங்க முடியாது எனக் கண்டு கொண்டதன் விளைவாகத் தோன்றிய கூற்றாகும்.

மன்னனுக்கும் மக்களுக்கும் உள்ள உறவானது தாய், தந்தைக்கும் பிள்ளைகட்கும் உள்ள உறவாகக் கருதியதைக் காணமுடிகிறது. புலவரும், மறக்குடி பெண்டிரும், மன்னனை 'எந்தை' எனக் குறிப்பிடுகின்றனர். மன்னன் இல்லாத நாடு அதன் வளத்தையும் சிறப்பையும் இழந்துபோகும்.

"அனையன் என்னாது, அத்தக் கோனை,

நினையாக் கூற்றம் இன்உயிர் உய்த்தன்று" (புறம் – 221)

தலைவனை இழந்து மக்கள் அடையும் துயரினை மேற்குறிப்பிட்ட புறநானூற்றுப் பாடல் வரிகள் பதிவு செய்கின்றன.

மன்னனை இழந்த நாடும் நாட்டுமக்களும் துன்பப்படுவது, தாயை இழந்த குழந்தைத் துன்பப்படுவதற்க்கு உவமையாகக் கூறும் நிலை காணப்படுகிறது.

"தாய்இல் தூவாக் குழவி போல,

ஓவாது கூஉம், நின் உடற்றியோர் நாடே"

என்னும் புறநானூற்றுப் பாடலில் மன்னனைத் தாயாகவும், தந்தையாகவும் எண்ணி பண்டைத் தமிழ் மக்கள் வாழ்ந்தமை புலனாகிறது.

குழந்தைகள் தாயையும், தந்தையுமே நம்பி வாழ்வது போலக் குடிமக்கள் மன்னனை நம்பி வாழக்கூடியவர்கள் இருந்தமையை.

"என் நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது" (புறம் — 72)

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகள், மன்னன் தாள் நிழலில் குடிகள் வாழ்வதைச் சுட்டுகின்றது.

குழந்தைகளின் நலனைக் காத்தல், அவர்கள் தவறு செய்யும்பொழுது கண்டித்துத் திருத்துதல் ஆகியவை பெற்றோரின் கடமைகளாகும். இங்ஙனம் மன்னனும் தன் குடிகளின் நலனைக் காத்தலோடு, தவறு செய்யும்பொழுது ஒறுத்துத் திருத்தும் உரிமையடைவனாக விளங்கினான் என்பது புலனாகிறது.

**மன்னனின் சிறப்பு**

'இறைவன்' என்னும் சொல்லுக்குக் கடவுள், மன்னன் என்னும் இரு பொருள்களும் வழங்கியிருக்க வேண்டும். சங்க இலக்கியத்தில் இச்சொல் மன்னனையே குறித்தது.

"இறைவன் தாட்கு" (புறம் , 18)

"இறைவன் ஆகலின்" (புறம் . 152)

"அவன் எம் இறைவன்" (புறம் . 316)

புறநானூற்றுப் பாடல் வரிகளில் வரும் இறைவன் என்னும் சொல் மன்னனைச் சுட்டுவது புலனாகிறது.

மக்களின் உயிரையையும், உடைமைகளையும், பிற நலன்களையும் காத்தலே மன்னனின் தலையாய கடனாகக் கருதப்பட்டது. மன்னர்கள் நாட்டு மக்களின் நல்வாழ்வும் வளமுமே தங்கள் குறிக்கோள் என்ற உயர்ந்த நோக்கத்தைக் கொண்டிருந்தனர்.

**முடிவுரை**

சங்ககாலச் சமுதாய இலக்கியங்கள் அறத்தை வலியறுத்தவதன் மூலம் மக்களின் அறவாழ்க்கைக்கு வழிகாட்டுவதாய் அமைகின்றன. கொடை, வீரம், காதல் என்ற முப்பொருளை அடிப்படையாகக்கொண்டு எழுந்தவை சங்க இலக்கியங்கள் ஆகும். பண்டைத் தமிழகத்தில் கோனாட்சி வழக்கினில் இருந்தது. பண்டைத் தமிழ் மன்னர் முழு அதிகாரம் பெற்றிருந்தனர்; கடமையுணர்ந்த காவலராய் விளங்கினர். சங்கச் சமூகத்தில் அறநெறிக் கொள்கைகள் சிறப்புடன் விளங்கியமையை அறியமுடிகிறது.

# என்ன வளம் இல்லை..

முனைவர் பா. சிங்காரவேலன்
உதவிப்பேராசிரியர்
முதுகலைத் தமிழ்த்துறை,
அரசு கலைக் கல்லூரி, மேலூர்

தமிழில் ஆய்வுகள் காத்திரமாக இல்லை என்ற குற்றச்சாட்டுகள் தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்களிடம் உள்ளன. இதற்கான காரணங்களை ஆய்வதும் அறிவதும் காலத்தின் கட்டாயமாகும். கல்லூரிப் பட்டப்படிப்புகளில் கடை நிலையில் சேர்க்கப்படுப்பவர்கள் தமிழ் மாணவர்கள். பிற பட்டப்படிப்புகளில் வாய்ப்பிழந்தவர்கள் வருடத்தை வீணடிக்காமல் இருக்க தமிழுக்குத் தள்ளப்படுகின்றனர். இவர்களில் சிலர் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி தனக்கான இடத்தைத் தக்க வைத்துக்கொள்கின்றனர். பல மாணவர்கள் கல்வியின் பயன் அறியாது நாட்களை நகர்த்தினால் போதும் என்ற மனோபாவம் உடையவர்கள். இவர்களால் வகுப்பறைகள் போர்க்களமாகுமே அன்றி, ஒரு போதும் போதிமரங்கள் ஆவதில்லை.

சிற்பியைப் போல் மாணவர்களின் தேவையற்ற பண்புகளை அகற்றி சிலையாக்கத் துடிக்கும் ஆசிரியர்களை மாணவ மனங்கள் ஏற்றுக்கொள்வதில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. தமிழின் சுவையை மாணவர்கள் அறிந்திடவும் எளிமையாகப் புகுந்திடவும் எத்தனையோ புத்தாக்கப் பயிற்சிகள் பேராசிரியர்களுக்கு அளிக்கப்பட்டாலும் கற்றவித்தையைக் காட்ட இயலாத நிலை நிலவுகிறது. மாணவர்கள் வெகுசன ஊடகங்களின் பெருக்கத்தால் மாய வலையில் சிக்கி சுய சிந்தனையை இழந்தும், ஆசிரிய மாணவர்களின் உறவின் உன்னதத்தைத் தொலைத்தும் வறண்டு காணப்படுகின்றனர்.

**மாணவர்களின் புரிதலுக்குச் சில:**

- ☆ திராவிட மொழிகளில் ஒப்பிலக்கணம் "எனும் நூலை கால்டுவெல் கள ஆய்வு செய்து எழுதினார்.
- ☆ தென்னிந்திய பழங்குடி மக்களின் வழக்காற்றைத் தொகுத்து நூலாக்கினார் எட்கர் தர்ஸ்டன்.
- ☆ தென்னிந்திய மக்களின் வழிபாட்டை ஆய்வுசெய்து நாட்டுப்புறவியல் ஆய்வுக் களத்திற்கு வித்திட்டார் ஹென்றி ஒயிட்ஹெட்.

- ☆ தமிழ் நாட்டுப் பழமொழிகளைத் தொகுத்தார் எல்லீஸ். அவருடைய பெயரில் மதுரையில் எல்லீஸ் நகர் அமைந்துள்ளது.
- ☆ தேம்பாவணிக் காப்பியத்தை இயற்றிய வீரமாமுனிவர் சீவக சிந்தாமணியில் இருந்தும் கம்பராமாயணத்தில் இருந்தும் காப்பிய நெறியை ஓர் அகப்பை முகந்துகொண்டேன் என்கிறார். இவர் தமிழகம் வந்தபின். சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழ் இலக்கண. இலக்கியம் கற்று. இலக்கியப் பேருரைகள் நடத்துமளவுக்குப் புலமை பெற்றார். இலக்கியச் சுவடிகளைப் பல இடங்கள் சென்று தேடி எடுத்ததால், "சுவடி தேடும் சாமியார்" எனவும் அழைக்கப்பட்டார். தமிழின் சிறப்பை மேல் நாட்டார் உணரத் திருக்குறள், தேவாரம், திருப்புகழ், நன்னூல். ஆத்திசூடி போன்ற நூல்களை ஐரோப்பிய மொழிகளில் வெளியிட்டார். தமிழ் கற்க ஏதுவாக தமிழ் – லத்தீன் அகராதியை உருவாக்கினார். அதில் 1000 தமிழ்ச் சொற்களுக்கு லத்தீன் விளக்கம் அளிக்கப்பட்டது. இதுவே முதல் தமிழ் அகரமுதலி ஆகும். பின்பு 4400 சொற்களைக் கொண்ட தமிழ்–போத்துக்கீய அகராதியை உருவாக்கினார். சதுரகராதியை, நிகண்டுக்கு மாற்றாகக் கொண்டு வந்தார். அக்காலத்தில் சுவடிகளில் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளி வைக்காமலே எழுதுவது வழக்கம். புள்ளிக்குப் ஈடாக நீண்ட கோடிருக்கும். மேலும் குறில், நெடில் விளக்க என்று "ர" சேர்த்தெழுதுவது வழக்கம். "ஆ" என எழுத "அர" என இரு எழுத்துக்கள் வழக்கிலிருந்தன. (அ: அர, எ:எர) இந்த நிலையை மாற்றி "ஆ, ஏ" என மாறுதல் செய்தார்.

தமிழ் இலக்கிய இலக்கணங்கள் கவிதை வடிவில் இருந்து வந்தன. அவற்றை மக்கள் படித்தறிய எளிதில் முடியவில்லை என்பதனை அறிந்து உரைநடையாக மாற்றியவர். தொன்னூல் விளக்கம் என்ற நூலில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களைத் தொகுத்தார்.

கொடுந்தமிழ் இலக்கணம் என்ற நூலில், தமிழில் முதல்முதலாகப் பேச்சுத்தமிழை விவரிக்க முனைந்தார். வழக்கும் செய்யுளுமே மொழியின் இலக்கணமாக அமையுமென்றாலும், இரட்டை வழக்கு மொழியான தமிழில், பேச்சுத் தமிழுக்கு இலக்கணம் அமைந்திராத காலத்தில் கொடுந்தமிழ் இலக்கணம் வகுத்தது, சிறப்பான முயற்சியே ஆகும்.

திருக்குறளில் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் பெயர்த்தவர் வீரமாமுனிவர். உரைநடையில் வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், ஞானக் கண்ணாடி, செந்தமிழ் இலக்கணம், பரமார்த்த குருவின் கதை, வாமன் கதை ஆகிய நூல்களைப் படைத்தவர்.

திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரி அம்மன் அம்மானை ஆகியன இவரது பிற நூல்கள்.

1728–இல் புதுவையில் இவரின் "பரமார்த்த குருவின் கதை" என்ற நூல் முதல்முறையாக இவரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இந்த நகைச்சுவைக் கதைகள் Jean de la Fontaine (1621–1695) எனும் பிரயரால் எழுதப்பட்டது. ஐரோப்பாவில் பிரபலமாக

இருந்ததை பெஸ்கி தமிழில் மொழிபெயர்த்தார் என்று சிலர் கருதுகின்றனர். இது தமிழில் முதல் முதலாக வந்த நகைச்சுவை இலக்கியம் ஆகும்.

தேம்பாவணிக் காப்பியம் மூன்று காண்டங்களில் 36 படலங்களைக்கொண்டு மொத்தமாக 3615 விருத்தப் பாக்களால் ஆனது. இதிலும் ஒரு சிறப்பு இருக்கிறது. பின்னிணைப்பாக யாப்பு வடிவங்களை அளித்திருக்கிறார். தமிழில் அமைந்த காப்பியங்களிலேயே, தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வெளிநாட்டவர் ஒருவரால் இயற்றப்பட்டது எனும் பெருமை தேம்பாவணிக்கு உண்டு. மேலும் வீரமாமுனிவரைப் போல, வேறெந்தக் காப்பியப் புலவரும் சிற்றிலக்கியம், அகராதி. இலக்கணம் உரைநடை எனப் பிற இலக்கிய வகைகளில் நூல்கள் படைக்கவில்லை

தமிழைத் தாய் மொழியாகக்கொள்ளாத பலர் தமிழின் இனிமையைக் கற்று உணர்ந்து அவற்றைப் பிறமொழிகளுக்கு மொழிபெயர்த்து காலத்தால் அழியாத காவியமாகப் பதிவு செய்துள்ளனர். மேற்கத்திய நாகரிகத்தை உள்வாங்கத் துடிக்கும் மாணவமனங்களில், தமிழ்ச் சான்றோர் படைத்த இலக்கிய இன்பத்தை அனுவிக்கும் மனப்போக்கு இல்லை என்பதை அனுபவத்தின் வழி அறியமுடிகிறது.

**மாணவர்களின் அறிவுக் தேடலுக்கான வழி**

☆ மேற்கத்தியர்கள் உணர்ந்து மகிழும் இலக்கியத்தை நம் தமிழ் மாணவர்கள் பயில மறுப்பது ஏன்?

☆ மாணவர்களின் வாழ்வியல் சூழலா?

☆ கற்றலில் உள்ள குறைபாடா?

☆ படிக்கும் பழக்கம் குறைவதற்கான காரணம் என்ன?

☆ திரை இசைக்குள் ஒளிந்திருக்கும் பாடல்களைப் பாடி மனனம் செய்யும் மாணவன், தாய்மொழி இலக்கியத்தைத் தப்பும்தவறுமாக உச்சரிப்பதும், எழுதுவதும், கலந்துரையாடுவதும் ஏன்?

☆ வாழ்க்கையைத் தான் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன என்று எண்ணற்றோர் எடுத்து இயம்பிடினும் அவற்றைப் புரிந்து கொள்ளாமைக்குக் காரணம் என்ன?

☆ மனிதர்களைப் பார், பழகு, அவர்களின் நடத்தை ஒவ்வொன்றும் அனுபவம் தான் என்று ஜெயகாந்தன் போன்ற படைப்பாளர்கள் எழுதி மாய்ந்து போனார்கள். அவர்களின் குரலுக்கான மதிப்புதான் என்ன?

☆ படைப்பாளர்களைத் தாண்டி மாணவர்கள் சக மனிதர்களைப் பார்க்க வேண்டும். அவர்களின் உணர்ச்சியைப் புரிந்துகொள்ள வேண்டும். மற்றவர்களிடமிருந்து நாம் எவ்வாறு வேறுபட்டு இருக்கின்றோம். நம் வாழ்க்கைச் சூழல் எத்தகையது என்பதைச் சுய ஆராய்ச்சி மற்றும் மதிப்பீடு செய்யும்போதுதான் தனக்கான இடத்தை மாணவர்கள் தக்க வைத்துக்கொள்ள இயலும். தேடலே இல்லாதபோது வாழ்க்கைப் பயணம் எங்ஙனம் சிறக்கும்.?

☆ மாணவர்கள் கற்றல் என்பது சான்றிதழ் பெறுவதில் இல்லை. கல்வியின் மகத்துவத்தைப் புரிதலில் இருக்கிறது.

- ☆ பாரதி என்ற ஆளுமை காலத்தால் நிலைத்து நிற்பதற்குச் சமுதாயத்தை அவர் கண்ட முறையும், மாற்றியமைக்க வேண்டும் என்ற வேட்கையுமே ஆகும். “வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதர்களுக்கு எல்லாம்” என்றும், “காக்கை குருவி எங்கள் சாதி கடலும் மலையும் எங்கள் கூட்டம்” என்றும் “சாதிகள் இல்லையடி பாப்பா” என்றும் திறந்த மனதுடனும் விரிந்த பார்வையுடனும் பாடியுள்ளார் என்பதை மாணவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.
- ☆ தாய்மொழியின் அடையாளத்தைத் தமிழர்கள் இழந்து வருவதால் தமிழா நீ பேசுவது தமிழா? ... என்கிறார் ஈழத்துக் கவிஞர் காசி ஆனந்தன்.
- ☆ அம்மா, அப்பா, ஊடகம், மிக நன்று, தாள், மென்மை என்ற நல்ல தமிழ் சொல் இருக்க மம்மி, டாடி, மீடியா, சூப்பர், பேப்பர், சாப்ட்வேர் என்று ஆங்கிலச்சொற்களை பயன்படுத்துவது ஏன் என்று வினவுகிறார் கவிஞர் கா. வேழவேந்தன்.
- ☆ தமிழ்தான் தமிழருக்கு முகவரி. ஒருவருக்கு பெற்ற தாய் எவ்வளவு முக்கியமோ அது போல ஒருவனுக்கு அவன் தாய் மொழி மிகவும் அவசியம் ஆகும் என்கிறார் அக்னி புத்திரன்.
- ☆ யாமறிந்த மொழிகளில் தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்.. என்று பாரதியும், செந்தமிழே உயிரே நறுந்தேனே.. என்று பாரதிதாசனும் பாடி தமிழ் மொழியின் சிறப்பைச் சீர்தூக்குகின்றனர். இப்படி பலரும் கூறுவதற்குரிய காரணங்களைத் தமிழ் மாணவர்கள் ஆராயத்தொடங்கினால் ஆய்வின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியும்.
- ☆ தமிழ் மாணவர்கள் திரையிசைப் பாடலைக்கூட மற்ற மாணவர்களுடன் பகிந்துகொள்ளும்போது பாடலின் இனிமை, இசையின் சிறப்பு, திரைக்கதைக்கும் பாடல் வரிகளுக்குமான நெருங்கிய தொடர்பு ஆகியவற்றைப் பேசுகிறபோது இரசிப்புத்தன்மை வளர்வதற்குரிய களம் அமைகிறது. சான்றாக, வானம் எனக்கொரு போதி மரம்.. (நிழல்கள்), மெத்தைய வாங்கினேன் தூக்கத்தை வாங்கல.. (முதல் மரியாதை), முகிலினங்கள் அலைகிறதே முகவரிகள் தொலைந்தனவோ.. (பயணங்கள் முடிவதில்லை) போன்ற பாடல்களை எடுத்துக்கொண்டு சிந்திப்பது படிக்கும் பழக்கத்தை மேம்படுத்தும்; இரசிப்புத் தன்மை வளரும்.
- ☆ நூலைப் படிக்கும்போது அதில் இடம் பெறும் முக்கிய கருத்தைச் சில வரிகளில் பக்க எண்ணுடன் குறித்துக்கொள்ள வேண்டும். ஆய்வு செய்யும் காலத்தில் தக்க துணையாக உதவும். ஆனால் இன்று குறிப்பெடுக்கும் பழக்கம் மாணவர்களிடம் இல்லை.
- ☆ முதுகலை, இளநிலை, முனைவர் பட்ட ஆய்வு செய்வோர் ஆய்வுத்தலைப்பு, தகவல் திரட்டும்முறை, கட்டுரையாக்கம் என்பவற்றின் அடிப்படையை அறிந்திருக்க வேண்டும். ஆனால் படிக்கும் பழக்கம், கலந்துரையாடல், சிந்திக்கும்

திறன் ஆகிய குறைபாடுகளாலும், பணத்தை விதைத்தால் ஆய்வேடு முளைத்து விடும் என்ற அகங்காரத்தினாலும் மாணவர்கள் ஆசிரியர்களைச் சந்திப்பது இல்லை. இதனால் ஆய்வு தடைபடுவதும் அல்லது ஆய்வு செய்யும் நெறியையும் அறியாது பட்டம் பெற்றுவிட்ட பெருமிதத்துடன் செல்கின்றனர்.

- ☆ ஆசிரியர்கள் கரும்பலகையில் குறிப்பெழுதி அதனை விளக்கிச் சென்றாலும் மாணவர்கள் அதனை உள்வாங்கி உருப்போட்டு விடைத்தாளில் வெளிப்படுத்துவதில்லை. பருவத்தேர்வில் பக்கங்களை நிரப்பி வைத்துவிட்டு கல்லூரி மற்றும் பல்கலைத் தேர்வுத்துறையைப் பார்த்துக்கொள்ளலாம் என்று குறுக்கு வழியில் வாழ்வு தேடும் கூட்டம் பெருகி விட்டது.
- ☆ தொடக்க காலத்தில் தமிழ் ஆய்வேட்டை ஆங்கிலத்தில் எழுதிச் சமர்ப்பித்தனர். தாய்மொழி இலக்கியத்தைப் படிக்கும் மாணவனுக்கு ஆங்கில அறிவும் இருந்ததை அறியமுடிகிறது. ஆனால் இன்று பல மாணவர்கள் இளங்கலை மூன்றாண்டை நிறைவு செய்து விட்டாலும், ஆங்கிலத் தேர்வில் தேர்ச்சி பெறாமல் பல ஆண்டுகள் தேர்வு எழுத வருவதையும் காணமுடிகிறது ஆங்கில மொழியின் அடிப்படைகளை உணர்ந்துகொள்ள வேண்டும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் ஆங்கில நூல்களைப் படிப்பது இல்லை. தமிழ் ஆய்வுலகிற்கு முன்னோடியாக இருப்பது ஆங்கிலேயத் திறனாய்வுகள்.
- ☆ புனைகதைகள், திறனாய்வுகள், கவிதைகள் போன்ற மேற்கத்திய வடிவங்களும், அணுகுமுறைகளும் பெருகியுள்ளன. அவை தமிழ்ப் பண்பாட்டுடன், எவ்வாறு இயைந்திருக்கின்றன என்பதை அறிவது அவசியமாகும்.
- ☆ நற்றமிழ் இலக்கணம், நல்ல தமிழில் எழுத வேண்டும் என்று நூல்கள் தமிழ் மொழியைக் கையாளும் முறையைப் பதிவு செய்கின்றன. பல மாணவர்கள் பிழை நீக்கி எழுத முயற்சிப்பதும் இல்லை; பிழையோடு எழுதுகின்றோம் என்று வருந்துவதுமில்லை.
- ☆ வைரமுத்துவின்.

காதலித்துப்பார் கவிதை வரும்

உன்னைச் சுற்றி ஒளிவட்டம் தோன்றும் (இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல)

என்ற பாடப்பகுதியில் உள்ள கவிதையை வகுப்பில் வாசித்துக் காட்டினேன். மாணவர்கள் எந்த உணர்ச்சியையும் வெளிக்காட்டது அமர்ந்து இருந்தனர். காதல் உலகத்து இயற்கை என்றால் இவர்களிடம் காதல் குறித்து புரிதல்தான் என்ன? விடை காணமுடியாத புதிராக உள்ளது.

**குரு பக்தி**

முன்னர் உற்றுழி உதவியும் உறு பொருள் கொடுத்தும் (புறம்) குருகுலக் கல்வி முறையில் மாணவர்கள் ஆசிரியர்களின் இல்லத்தின் தங்கி கல்வி பயின்றனர். செவியால் கேட்டு மனதில் இருத்தி மனனம் செய்து படிக்கும் முறை வழக்கில் இருந்தது. அக்காலத்தில் அம்மா, அப்பாவிற்கு அடுத்த நிலையில் ஆசிரியரை வைத்தனர்.

“குலத்தை மறந்தாலும் குருவை மறவோமோ” என்று சீடர்கள் குரு காட்டிய வழியில் நம்பிக்கையோடு சென்றனர். சமூகத்தில் பெரிய பதவிகளையும் பொறுப்புகளையும் வகித்த பஷ்ர் காட்டிய குருபக்தி, இன்றைய மாணவர்களிடம் உள்ளனவா? உற்றுழி உதவிட ஆசிரியர்கள் தயாராக இருப்பினும் மாணவர்கள் முன்வராமைக்கான காரணம் என்ன?

**நிறைவாக**

“தன்னை அறிந்தால் தனக்கோர் கேடில்லை” என்கிறார் திருமூலர். கல்வியாளன் அறிவது அறிந்து அஞ்சுவது அஞ்சி உலகம் உவப்ப வாழ வேண்டும் என்று தமிழ் இலக்கியங்கள் இஸ்ம்புகின்றன. “எல்லாப் பொருளும் இதன் பால் உள“ என்று சொல்லும் அளவிற்கு உலக மொழி இலக்கியங்களுக்கு இணையாக, தமிழரின் நாகரிகத்தையும், பண்பாட்டையும் பறைசாட்டும் வளமான இலக்கியங்கள் தமிழ் மொழியில் உள்ளன. இலக்கியத்தைப் பயிலும் மாணவர்கள் தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ்ப் பண்பாடு, நாகரிகத்தின் மீது பற்றுதல் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

செம்மொழியாம் தமிழ் மொழியை ஆழமாகக் கற்றால் காத்திரமான ஆய்வு நிகழும். தாய் மொழியாம் தமிழ் மொழியைப் பிழையின்றிக் கற்போம்.... எழுதுவோம்.. சிந்திப்போம்.. கலந்துரையாடுவோம்.. அமுதத் தமிழ் மொழிபோல் அனைவருடனும் இனிமையும் பழகுவோம்.. மனமாட்சியை ஏற்படுத்துவோம்.. ஒற்றுமையே வாழ்வில் உயிா நிலை என்பதை அறிவோம். புதியன காணும் ஆர்வமுடன் தேடினால் ஆய்வுகள் சிறக்கும்.. ஆய்வாளர்கள் உயர்வர்.. கற்பித்த ஆசிரியரும் பெருமிதம் கொள்வர்.

# மண்மணம் காக்கும் மறவர்கள்

**முனைவர் இ. யுவராணி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பி.கே.ஆர். கலைக் கல்லூரி
கோபிசெட்டிப் பாளையம்

**முன்னுரை**

பொதுவாக மறவர்களெனில் வீரர்களாகிய ஆடவர்களையே குறிக்கும். அறத்தை நிலைநாட்ட விரும்பும் மறப்பண்பு உடையவர்களையே மறவர்கள் எனக் குறிக்கப்பெறுவர். போர்க்களத்தில் போரிட்டு மடிந்ததும், போரில் வெற்றியடைந்ததும் மண்ணைக் காத்த மறவர்கள் பலர் சங்க காலத்தில் புலவர்களால் பாராட்டப்பெற்றுள்ளனர். அத்தகு மறவர்களின் மாண்பு குறித்து புறநானூற்றின் வழி இக்கட்டுரையில் காண்போம்.

**மறவர்களைச் சுட்டும் சங்ககாலப் பெயர்கள்**

“ஆடுநர், அண்ணல், ஆடவர், ஊர்க்காப்பாளர், களமர், குருசில், காளை, தானைச்சான்றோர், படைஞர், பொருநர், மல்லர், மள்ளர், மழவர், மெய்க்காப்பாளர், விறலோர் போன்ற பல சிறப்புப் பெயர்களால் மறவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

**மறவர்களின் உணர்வு**

சேரமான் பெருஞ்சேரலாதன், சோழன் கரிகால் பெருவளத்தானோடு போரிட்ட போது கரிகால்வளவன், சேரலாதன் மார்பிலே எறிந்த வேல் அவன் உடலுக்குள் ஊடுருவி முதுகு வழியாகச் சென்றது. மார்பிலே எறிந்த வேல் முதுகில் புண்ணை ஏற்படுத்தியதால் சேரமான் பெருஞ்சேரலாதன் அதுவும் புறப்புண்ணுக்கு ஒப்பாகும் என்று கருதி உயிர் வாழ விரும்பாமல் வடக்கிருந்து உயிர் துறந்தான். சேரமன்னனின் இம்மான உணர்வினை,

“புறப்புண் நாணி மறத்தகை மன்னன்
வாள் வடக்கு இருந்தனன் ஈங்கு
நாள்போற் கழியல ஞாயிற்றுப் பகலே” (புறம்; 65; 10–12)

என்று புலவர் கழாத்தலையார் பாடியுள்ளார்.

**வெற்றியினும் சிறந்த பண்பு**

சேரமான் பெருஞ்சேரலாதனைப் போரில் வென்று சோழன் கரிகால் பெருவளத்தான் குறித்து வெண்ணியககுயத்தியார் புறநானூற்றில் பின்வருமாறு பாடியுள்ளார்.

“வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே

கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை

மிகப்புகழ் உலகம் எய்தி

புறப்புண் நாணி வடக்கிருந்தோனே” (புறம்; 66; 5–8)

அதாவது ’போர்க்களத்தில் எதிர்நின்று நின் வலிமை தோன்ற வெற்றி பெற்ற மன்னனே! தழைத்தலையுடைய புதுவருவாய் பொருந்திய வெண்ணி என்னும் ஊரின் போர்க்களத்தில் உலகத்துப் புகழை மிகப் பொருந்திய புறப்புண்ணுக்கு நாணம் கொண்டு வடக்கிருந்தோன் உன்னைவிட நல்லவன் அல்லனோ! என்று கூறுவதிலிருந்து போரில் அடைந்த வெற்றியைக் காட்டிலும், முதுகில் பட்ட புறப்புண்ணுக்காக வடக்கிருந்து உயிர் துறந்த நிகழ்ச்சி மறவர்களின் மான உணர்வை வெளிக்காட்டுகிறது.

**தோல்வியெனின் அடையும் துயரம்**

பாண்டியன் நெடுஞ்செழியனோடு போரிடுவதற்கு அவனுடைய பகைவர்கள் வருகின்றனர். பாண்டியனும் போருக்குப் புறப்படுகிறான். அப்பொழுது எதிர்த்து வரும் பகைவரை வெல்லாமல் போனால் தனக்கு எப்படிப்பட்ட இழிநிலை வரும் என்பதைப் பாண்டியன் கூறுகிறான். ’என் சுற்றத்தார் போன்றோர் மிக்க துயரமுறும்படியாகவும், என்னிடம் வந்து இரப்போக்கு இல்லையென்று சொல்லும்படியாகவும் உள்ள இழிந்த வறுமை நிலையை நான் அடைவேனாக என்று பல இழிநிலைகளைக் கூறி வஞ்சினத்துடன் முடிக்கின்றான்.

“புறப்போர் புன்கண் கூர

இரப்போர்க்கு கீயா இன்மையான் உறவே” (புறம்; 72; 17–18)

அதாவது பிறர்க்கு கொடுக்க இயலாத நிலையே மிகவும் இழிவானது என்பதை மேற்கண்ட அடிகளால் உணரலாம்.

**சான்றோர்களாக காட்சியளிக்கும் மறவர்கள்**

மறவர்களைப் புலவர்கள் ‘சான்றோர்கள்’ எனப் போற்றுவதும் உண்டு. மன்னருக்கு இணையாக நின்று போர்க்களத்தில் போரிட்டு வென்று சிறப்படைந்தோறும் மன்னர் மறுத்தும் கேளாது போரிட்டு வீரமானம் அடைந்தோறும், மண்ணைக் காக்க உயிரைத் தியாகம் செய்தோறும் எனச் சான்றோர்களாக விளங்கிய மறவர்கள, இலக்கியங்களில் சிறப்பாகக் கூறப்பெற்றுள்ளனர்.

“தேர்தர வந்த சான்றோர் எல்லாம்

தோல்கண் மறைப்ப ஒருங்கு மாய்ந்தனரே” (புறம்; 63 5–6)

என்ற மறவர்களைச் சிறப்பித்துப் பரணர் பாடியுள்ளார்.

**மன்னரும், மறவரும்**

மன்னர்கள் மறவர்களைத் தமக்கு இணையாகவே வைத்து எண்ணியுள்ளனர். மன்னர்கள் போர்க்களம் புகும்முன் வஞ்சினம் கூறும்பொழுது தம்மை மறவர்களாக நினைத்துக்கொண்டு வஞ்சினம் கூறியுள்ளனர்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்,

"நெடுநல யானையும் தேரும் மாவும்

படை அமை மறவரும் உடையம் யாமென்று

உறுதுப்பு அஞ்சாது" (புறம்; 72; 4–6)

என்று சினந்து கூறியுள்ளான், மறவர்களின் துணையுடன் பகைவர்களை வெல்லாமல் தோற்றுப்போவேனாயின்,

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி

மாங்குடி மருதன் தலைவன் ஆக

உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்

புலவர் பாடாது வரைகஎன் நிலவரை" (புறம் ;72; 13–16)

என்ற அடிகளின் மூலம் உயர்ந்த தலைமையுடனே மேன்மையான கேள்வியுடை மாங்குடி மருதன் முதலாக உலகத்தில் நிலைபெற்ற பலரும் புகழும் புலவர் என் நாட்டைப் பாடாது ஒழிக என்று கூறியுள்ளான். தம்மையும். தம்மைச் சார்ந்த மறவர்களையும் இணைத்தே வஞ்சினம் கூறியுள்ளான்.

**பகைவர்களே வலிமை**

கிள்ளிவளவன் தம் மறவர்களுடன் பகை நாட்டிற்குள் நுழைந்து, பகைவர்கள் இல்லாமல் காவல் மரத்தை வெட்டுகிறான். போர் என்றால் மறவர்கள் எதிரிலிருந்து போரிட வேண்டும். அப்படி இல்லையாயின் மரத்தை வெட்டுவது கோழைத்தனம் என்கிறார் புலவர்.

"கடிமரம் தடியும் ஓசை தண்ஊர்

நெடுமதில் வரைப்பின் கடிமனை இயம்ப

ஆங்குஇனி திருந்த வேந்தனொடு ஈங்குநின்

சிலைத்தார் முரசம் கறங்க

மலைத்தனை என்பது நாணுத்தகவு உடைத்தே" (புறம்; 36; 9–13)

என்ற அடிகளிலிருந்து எதிரில் பகைவர்கள் பகைக் கொண்டு இருந்தாலே அது தமக்கு வலிமை என்று கொண்டு சங்க கால மறவர்கள் போரிட்டனர் என்பதை உணரலாம்.

**மறத்தில் அறம்**

பண்டைய மக்களின் போரிலும் இரக்கவுணர்வு மேலிடுகிறது. போர்த்தொடுப்பதற்கு முன்னே பகைவன் நாட்டிலுள்ள பசுநிரையும், அந்தணரும், பெண்டிரும், பிணியாளரும், புதல்வனில்லாதோறும் அகன்று செல்லுமாறு பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி அறிவித்துள்ளான். இதனை,

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்என
அறத்துஆறு நுவலும் பூட்கை" (புறம்; 9; 1–6)

என்று புலவர் நெட்டிமையார் பாடியுள்ளார்.

**மக்களைக் காக்கும் மறவர்கள்**

மக்கள் சமூகத்தில் பாதுகாப்பதற்கு வாழ மறவர்கள் பாதுகாப்பு தந்தனர். மக்கள் கவலையில்லாமல், அச்சமில்லாமல் வாழ காக்கும் தெய்வங்களாகக் காளை போன்ற மறவர்கள் விளங்கினர் என்பதை,

"புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன மாதோ போர்க்களத் தானே" (புறம்; 86; 4–6)

என்ற அடிகளால் அறியலாம்.

வீரப்போர் செய்து புகழ்பெற்ற மறவன், பகைவரிடத்திலிருந்து மக்களைக்காப்பது, மழை பெய்யும் போது நம்மைக்காக்கும் பனை ஓலைக்குடைக்கு ஒப்பாகக் கூறப்படுகிறது. ஆகவே மறவர்கள் மக்களைக் காக்கும் இயல்பை,

"மறப்புகழ் நிறைந்த மைந்தினோன் இவனும்
உறைப்புழி ஓலை போல
மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு வேலே" (புறம் ;290; 6–8)

என்று ஔவையார் பாடியுள்ளார்.

**முடிவுரை**

மறவர்கள் மிகச்சிறந்த வீரர்கள் ஆவர். அவர்கள் தம் உயிரைப் பெரிதென எண்ணாது மண்ணிற்காக அரும்பாடுபட்டவர்கள். சங்க காலப் போரில் மனித மாண்பையும், அறத்தையும் பின்பற்றிய பெருமை சங்க மறவர்களையே சாரும். புறநானூறு, மறவர்களின் மாண்பினை எடுத்துப்போற்றும் சிறந்ததொரு ஆவணமாகும்.

# குலசேகர ஆழ்வாரின் வரலாற்று வைபவம்

ஜெ. இந்திரகுமாரி
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி
வாணியம்பாடி

**முகவுரை**

உலகிலேயே புராதானமானது இந்து மதம், சைவமும், வைணவமும் அதன் இரு கண்களாகும். இவற்றைப் பேணிக் காக்க நாயன்மார்களும், ஆழ்வார்களும் அவதரித்தனர். நாயன்மார்கள் அறுபத்துமூவர், ஆழ்வார்கள் பன்னிருவர். இவர்கள் பல்வேறு குலங்களில் பிறந்தவர்கள். என்றாலும், இவரர்கள் தம்தம் தெய்வங்களிடம் கொண்டிருந்த பக்தியின் ஆழத்தில் ஏற்றத்தாழ்வு இல்லை. அரசர். அந்தணர், வணிகர், வேளாளர், குயவர், பாணர் போன்ற பல்வேறு குலங்களில் பிறக்குமாறு இறைவன் இவர்களுக்கு அருள் செய்தது சாதி, மதம் என்னும் வேறுபாடு எல்லாம் இறைவழிபாட்டிற்கு இல்லை என்னும் உண்மையை உலகிற்கு உணர்த்துவதற்கே ஆகும். அவ்விதம் சேரநாட்டில் அரசர் மரபில் நாயன்மார்களில் ஒருவராக பெருமாக்கோதையாரும், ஆழ்வார்களில் ஒருவராகக் குலசேகரரும் அவதரித்தனர்.

**சேரநாட்டின் சிறப்பு**

செந்தமிழ் நாட்டைச் சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தரும் சிறப்புற ஆண்ட காலத்தில் சேரநாடு யானை உடைத்து, சோழ நாடு சோறுடைத்து, பாண்டியநாடு முத்துடைத்து என்று போற்றும்படியாக பல்வேறு வளங்களுடன் விளங்கின. அவற்றுள் சேரநாடு தனியழகுடன் திகழ்ந்தது. எங்கும் வற்றா நதிகள், வானுயர்ந்த மலைகள் என மலை சூழ்ந்த பகுதியாக சேரநாடு விளங்கியதால் மலைநாடு என்றே அழைக்கப்பட்டது. நெடிது ஓங்கிய மரங்கள்! துள்ளிப் பாயும் அருவிகள்! கண்ணைக்கவரும் வண்ண மலர்கள்! மணம் வீசும் சந்தனக் காடுகள்! எனச் சேரநாடு இயற்கை அன்னையின் ஆலயமாக காட்சியளித்தது, இந்நாட்டின் தலைநகரமாக வஞ்சி மாநகர் விளங்கியது.

**குலசேகரர் திருஅவதாரம் செய்தது**

சேர மன்னரான திடவிரதன் சிறந்த விஷ்ணுபக்தர், அவனது அரசி நாதநாயகி, இவர்கள் தங்கள் குலம் தழைக்க குழந்தை ஒன்றை எம்பெருமானிடம் வேண்ட இறைவன் அருளால் குலசேகரர் பிறந்தார். அவருக்கு அரச குலத்திற்குரிய

நெறிமுறைகளோடு அரச பதவியை ஏற்க சகல போர்த் தொழில்களிலும் அவருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. அவரும் அறிவும், , கலையுணர்வும், வீரமும், துணிவும் மிக்க இளைஞராக வளர்ந்தார்.

**குலசேகரர் அரசராக முடிசூடுதல்**

திடவிரதன் தான் முதுமை அடைந்ததால், தன் மகன் குலசேகருக்கு முடிசூட்டி ஆட்சி பொறுப்பை ஒப்படைத்துவிட்டு அரசியுடன் கானகம் சென்றார். குலசேகரரும் செங்கோல் தவறாது ஆட்சி செய்தார். அவருக்குப் பாண்டிய மன்னன் தன் மகளைத் திருமணம் செய்துவித்தான். இல்லற வாழ்வின் இனிய பரிசாக ஒரு பெண் குழந்தையையும், ஒரு ஆண் மகளையும் பெற்றார். இங்ஙனம் இல்லறத்தை நல்லறமாகக்கொண்டு வாழ்ந்து வந்தார். எனினும் அவரது மனதில் குறை ஒன்று இருந்தது, முழுதற் கடவுள் யார்? என்று. எனவே, அறிவில் சிறந்த சான்றோர் பலரைத் தன் அரசவைக்கு வரவழைத்தார். பலநாட்கள் அவர்களோடு உரையாடினார். முடிவில் நிறைவான குணங்கள் நிறைந்த முழுதற் கடவுள் திருமாலே என்று உணர்ந்து அவரது திருஅவதாரங்களில் இராம அவதாரத்திலும், கிருஷ்ண அவதாரத்திலும் மனதைப் பறிகொடுத்து இறை பக்தியில் ஆழ்ந்தார்.

**அரசர் ஆழ்வாராக மிளிர்ந்தது**

மனித உயிர்கள் அனைத்தும் தம்தம் திறத்திற்கு ஏற்ப கனவு காணுதல் இயற்கை. அகத்துறையில் ' கனவிழந்துறைத்தல்' என்னும் ஒரு துறையே உள்ளது. நேரில் கணட தலைவனை கனவிலும் தலைவி கண்டு மகிழ்கிறாள். ஆண்டாளும் கண்ணனைக் காதலித்தாள். கண்ணிலும், கருத்திலும் நின்ற காதலனைக் கனவிலும் காண்கிறாள் ஆண்டாள், அதுவும் தனக்கும் கண்ணனுக்கும் திருமணம் நடப்பதாக கனவு காண்கிறாள். அக்கனவை தன் தோழியிடம் உரைப்பதாக ஆறாம் திருமொழியில்,

“வாரண மாயிரம் சூழவலஞ் செய்து
நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புரமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்”

(நாலாயிர திவ்ய பிரபந்தம், நாச்சியார் திருமொழி, பா. 556)

என்கிறாள். காதலன் மட்டும் கனவில் வருவதில்லை அடியார்களின் அன்பிற்காக இறைவனும் அவர்கள் கனவில் தோன்றி அருளுகிறான். இறைவனின் கருணை வெள்ளமானது குலசேகரருக்கு ஒரு நாள் இரவு கனவாக தோன்றி தீருவேங்கட மலையில் வாழும் ஸ்ரீசீனிவாச பெருமாள் தன் திவ்ய தரிசனத்தைக் காட்டி அருள் புரிந்தார். கனவில் கண்ட பெருமானை மீண்டும்மீண்டும் நினைத்துப் பார்த்து மகிழ்ந்து மண்ணவரும், விண்ணவரும் காண்பதற்கு அரியவரான இறைவன் தானாகவே வந்து தமக்கு காட்சி அளித்ததை எண்ணி பெருமிதம் கொண்டார். திருவேங்கடமலைக்குச் சென்று சீனிவாசனைக் கண் குளிர கண்டுக் மகிழ்ந்தார். இழந்த செல்வத்தை மீண்டும் பெற்றவராய் உள்ளம் பூரித்தார். தமிழில் பாமாலை பாடி மகிழ்ந்தார். பெருமானைக் கண்ட பின்பு குலசேகரரின் மனம் மெல்லமெல்ல அரச பாரத்திலிருந்தும். இல்லற

பந்தந்திலிருந்தும் தளர்ந்தது. நாளடைவில் அவர் மனம் முற்றிலும் இறைவழிபாட்டிலேயே ஈடுபட்டது.

நமது நாட்டின் மாபெரும் இதிகாசங்களான இராமாயணமும், மகாபாரதமும் குலசேகரைக் கவர்ந்தன. ஒவ்வொரு நாளும் மகாபண்டிதர்களைக் கொண்டு இராமாயணக் கதைகளைச் செவிக்குளிர கேட்டு வந்தார். அப்படி கேட்கும்போது அவர் தம்மையே மறந்து கதையோடு ஒன்றி விடுவார். ஒருமுறை இராமாயாண கதையில் இராமர் அரக்கர்களுடன் தனியாகப் போர் புரிகிறார் என்று சொற்பொழிவாளர் உணர்ச்சியுடன் சொல்லக் கேட்ட குலசேகரர் இதோ நான் பெரும்படையுடன் துணைக்குச் சென்று என் இராமனைக் காப்பேன்! என ஆவேசத்துடன் எழுந்து படை திரட்டப் புறப்பட்டார். பின்னர் பண்டிதர் ஒருவழியாக அவரைச் சமாதானம் செய்து இராமர் வெற்றி பெற்று விட்டார் என நயமாக உரைத்து அவரை தம் சுய நினைவு பெறச் செய்தார்.

இராமபக்தியில் நாளும் திளைத்த குலசேகருக்கு ஒருநாள் இராமனாகவே காட்சி தந்து, எம்பெருமான் இளைய பெருமாளான தம்பி இலக்குவன் போல் உமக்கும் எம்மீது அளவற்ற பாசம் ஆதலால், இனி நீயும் 'பெருமாள்' என்னும் திருப்பெயரால் அழைக்கப்படுவதாக என மொழிந்தார். அன்றுமுதல் வைணவகுலம் குரசேகரரைப் என்றே கொண்டாடுகிறது. நாலாயிர திவ்யபிரபந்தயத்தில் இவர் பாடிய பாசுரங்களின் தொகுப்பைப் 'பெருமாள் திருமொழி' என்றே அழைக்கின்றனர்.

**திருவேங்கடத்தில் பிறத்தலும், இருத்தலும் போதும் எனல்**

குலசேகரர் இயற்றிய பெருமாள் திருமொழியில் பிறவி வேண்டாம் என்றே இறைவனிடம்

"ஊனேறு செல்வத்து உடற்பிறவி யான் வேண்டேன்"

(நாலாயிர திவ்ய பிரபந்தம், பெருமாள் திருமொழி பா, 677, வரி–1)

என்கிறார். மேலும் மனிதனாகப் பிறந்தாலும் விண்ணையும், மண்ணையும் ஆள்கின்ற உரிமைக் கிடைத்தாலும் அதை

"ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ

வானாளும் செல்வமும் மண்ணகரசும் யான் வேண்டென்"

(நாலாயிர திவ்ய பிரபந்தம், பெருமாள் திருமொழி பா, 678, வரி–1–2)

என்கிறார், பிறவி வேண்டாம் என்று வேண்டும் குலசேகரர் திருவேங்கட மலையில் எம்பெருமானின் திவ்ய பேரழகைக் காண அம்மலையில்

"கோனாரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே"

(நாலாயிர திவ்ய பிரபந்தம், பெருமாள் திருமொழி பா,677, வரி–1)

"மீனாய் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே"

(நாலாயிர திவ்ய பிரபந்தம், பெருமாள் திருமொழி பா.677. வரி–4)

"செண்பகமாய் நிற்கும் திருவுடையேன் ஆவேனே"

(நாலாயிர திவ்ய பிரபந்தம், பெருமாள் திருமொழி பா,680,வரி–4)

"தம்பகமாய் நிற்கும் தவமுடையேன் ஆவேனே"

(நாலாயிர திவ்ய பிரபந்தம், பெருமாள் திருமொழி பா.677வரி–1)

"படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே"

(நாலாயிர திவ்ய பிரபந்தம், பெருமாள் திருமொழி பா.677, வரி–1)

என்கிறார். திருவேங்கடமலையில் மரமாகவோ, அங்குள்ள தீர்த்தத்தில் மீனாகவோ, கொக்காகவோ, வெண்பக மரமாகவோ, அவனது சந்நிதியில் அடியார்கள் மிதித்து செல்லும் கற்படியாகவோ பிறந்து எந்நேரமும் எம்பெருமானைத் தரிசித்திருக்க வேண்டும் என்பதே அவரது தணியாத வேட்கை. இராம அவதாரத்தில் உள்ளம் பறி கொடுத்ததைப் போன்று கிருஷ்ண அவதாரத்திலும் உள்ளம் பறிகொடுத்தவர் குலசேகரர்.

**முடிவுரை**

முடிசூடி மண்ணாள்வதைவிட, இறைவன் அடிபாடி அருளைப் பெறுவதே சிறந்தது என குலசேகரர் தன் மகனுக்கு முடிசூட்டி நாட்டை ஆளும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, ஆண்டவன் அடியாராக வெளியறி எம்பெருமான் உறையும் தலங்களுக்குச் சென்று கண்ணார கண்டு வாயாரப் பாடி மனதார வழிபாட்டு இறுதியில் தென்பாண்டி நாட்டு மன்னார் கோயிலில் இறைவனடி சேர்ந்தார்.

# பாரதிதாசன் கவிதைகளில் உவமைகள்: ஒரு தொல்காப்பியப் பார்வை

கஸ்தூரி சுப்ரமணியன்
Research Scholar, Masters in Tamil Literature
Faculty of Language and Communication
Sultan Idris Education University
Tanjong Malim, Perak, Malaysia

சமுதாயச் சீர்திருத்த புரட்சிக் கருத்துக்களைத் தமது எழுத்தில் கூறிப் 'புரட்சிக்கவிஞர்' என்ற சிறப்புப் பெயருக்கு பொருந்தியவராய்த் திகழ்ந்தவர் புதுவை தந்த கவிஞர் பாரதிதாசன். பாரதிதாசனின் இயற்பெயர் கனகசுப்புரத்தினம் ஆகும். பாரதிதாசன் சிறுவயதிலேயே பிரெஞ்சு மொழிப் பள்ளியில் பயின்றார். ஆயினும் தமிழ்ப் பள்ளியில் பயின்ற காலமே அதிகம். தனது பதினாறாவது வயதிலே கல்லூரியில் தமிழ்ப்புலவர் தேர்வு கருதிப்புகுந்தார். தமிழ்மொழிப் பற்றும் முயற்சியும் நிறைந்தவராதலால் இரண்டே ஆண்டுகளில் கல்லூரியில் முதலாவதாகத் தேர்வுற்றார். பதினெட்டு வயதில் அவரின் சிறப்புணர்ந்த அரசியலார் அவரை அரசினர் கல்லூரித் தமிழாசிரியராக்கினார்கள் (பாரதிதாசன்.1990:9).

தொடக்காலத்தில் பாரதிதாசன் கடவுள் நம்பிக்கை உடையவர். ஆனால் கடவுள், சமயம் ஆகியவற்றின் பெயரால் நடக்கும் கொடுமைகளை எதிர்த்தார். கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், பாரதிதாசன் எனப் பல புனைபெயர்களில் எழுதிவந்த பாவேந்தர், தந்தை பெரியாரின் தீவிரமான தொண்டர் ஆவார். (பாரதிதாசன், 1990:10). திராவிடர் இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு மிகுந்தவர். 1954 ஆம் ஆண்டு புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

பாரதிதாசன் தொடக்ககாலத்தில் இறை நம்பிக்கை, இறையுணர்வு மிக்க கவிதைகளைப் பாடினார். பிறகு, திராவிட இயக்கத்திலும் பெரியார் கொள்கையிலும், சுயமரியாதை இயக்கத்திலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டதன் காரணமாகத் திராவிட இயக்க வளர்ச்சியோடு, பாரதிதாசனின் வளர்ச்சியும், அறிமுகமும் இணைந்தே வேகமாக வெளிப்பட்டன. "புதுமைக் கருத்துக்களையும் புரட்சிக் கருத்துக்களையும் சமுதாயத்திற்குத் தேவையான சமதர்மக் கருத்துக்களையும் துணிந்து வெளியிட்டவர்" என்று பெரியார் பாரதிதாசனைப் பாராட்டியிருக்கின்றார். (கிருஷ்ணசாமி,

2004:vi). தந்தை பெரியாரின் கருத்துக்களைக் கவிதை இலக்கியமாக்கியவர் பாரதிதாசன்.

"எனக்குக் குயிலின் பாடலும், மயிலின் ஆடலும், வண்டின் யாழும், அருவியின் முழவும் இனிக்கும்; பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்" என்று தமிழ்ப் பெரியார் 'திரு.வி.க' அவர்களும், "பாரதிதாசன் கவிதையில் வேகம் உண்டு; விடுதலைத்தாகம் உண்டு; பண்பும் உண்டு பயனும் உண்டு" என்று பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை' அவர்களும் பாரதிதாசனைப் போற்றியுள்ளனர் (பாலசுப்பிரமணியமம், 1981:65).

**உவமை**

ஒரு பொருளை அல்லது பல பொருட்களைப் பிற பொருட்களுக்கு அப்பொருட்களின் ஒற்றுமைக் கூறு அல்லது கூறுகளின் அடிப்படையில் ஒப்புமைப்படுத்ததிக் கூறுவதே உவமையாகும். அறியாதவற்றை ஓரளவு அறியச் செய்வதற்கும் அறிந்தவற்றைச் சிறப்பிப்பதற்கும் உவமை கையாளப்படுகின்றது. படைப்பாளியின் புலமைத்திறத்தைப் புலப்படுத்துவதோடு படைப்பிற்கும் சுவையூட்டுவதால் உவமைகள் இலக்கியத்தில் பண்டுதொட்டு இன்றுவரை சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன (சயாபுமரைக்காயர்.மு, 1990:1).

**உவமையியல்**

கவிதைகளில் இடம் பெறும் அணிகளில் உவமை அணியே தலையாயது. வாழ்க்கையில் நிகழும் உண்மைகளை அழகாக எடுத்துக் கூறுவது கவிதை. கவிதைக்கு அழகும் உயிர்ப்பும் கொடுப்பது உணர்ச்சிகளும் கருத்துக்களும் ஆகும். இவற்றோடு இணைந்து சிறப்பு தருவது கற்பனை. கற்பனையின் அழகான தோற்றம் உவமை ஆகும்.

உவமை கவிதையில் இடம் பெறும்பொழுது அல்லது இலக்கிய வகைகளில் இடம் பெறும்பொழுது, இருவகையாகப் பயன்படுகின்றது, அவை, தெளிவாகத் தெரியாதவற்றை நன்கு தெளிவுபடுத்திக் காட்டவும், தெரிந்ததை மேலும் சுவையூட்டும்வண்ணம் அழகுறக்காட்டவும் உவமை பயன்படுகிறது. இக்கூற்றினை,

"இதனாற் பயன் என்னை மதிப்பதோ எனின்
புலனல்லாதன புலனாதலும் அலங்கரதமாகிக்
கேட்டார்க்கு இன்பம் பயத்திலும்"

(தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமையியல், பக்:iii)

என்கிற தொல்காப்பியர் உவமை அணியினை நான்கு வகையாகப் பகுத்துள்ளார். அவை வினை, பயன், வடிவு, நிறம் என்பன ஆகும்.

"போல", "புரைய" என்பன போன்ற உவம உருபுகள் வெளிப்படையாகக் காணப்படுங்கால் "உவமவிரி" என்றும், இவை தொக்கிவரும்பொழுது "உவமைத் தொகை" என்றும் வழங்கப் பெறுகின்றன. "தாமரை அன்ன முகம்" என்பது உவமவிரி. "தாமரை முகம்" என்பது உவமைத் தொகை. தொல்காப்பியர் உவம உருபுகள் முப்பத்தாறினைத் தொகைப்படுத்தி அவற்றுள் அடங்காதனவும் உள்ளன எனக் குறிப்பிடுகின்றார் (சுப்புரெட்டியார், 2001:113).

சிறந்த உவமை, பொருளின் தன்மையைத் தெளிவாக விளங்கவைப்பது அதனைச் சிறப்பிக்கவும் செய்யும். எக்காலத்து இலக்கியமானாலும் அதனுடைய அழகைச் சிறப்பித்துக் கூறவல்லது உவமையாகும். அவ்வகையில் தமிழ்க் கவிதையில் இனிமையும், கருத்துச் செறிவும் சிந்தனைப் புரட்சியும், உவமையில் புதுமையுடன் கலந்து பாடியவர் கவிஞர் பாரதிதாசன் ஆவார்.

'ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியன்'

எனப் போற்றப்படும் தொல்காப்பியனாரே தொல்காப்பியத்தை எழுதியயவர். இவர் பழந்தமிழ்ப் பெருங்குடிகளுள் ஒன்றாகிய காப்பியக் குடியிலே தோன்றியவர் (புலியூர்க்கேசிகன், 1983:4).

தொல்காப்பியம் எழுத்து, சொல் பொருள் என்ற மூன்று அதிகாரப் பகுப்பினை உடையது. இம்மூன்று அதிகாரங்களும் ஒன்பது இயல்களாக இயலும் நெறியினைக் கொண்டதாகவும், ஒவ்வொரு இயலும் எளிய சூத்திரங்களைக்கொண்டு விளங்குவதே இத்தமிழின் அரும்பெரும் நூல் ஆகும்.

உமையியல், பொருளதிகாரத்தில் ஏழாவது இயலாக அமைக்கப்பட்டுள்ளது. தம் உள்ளத்தில் எழும் கருத்துக்களைச் சிதைவின்றி உள்ளத்தில் எழுந்தவாறே பிறருக்கு அறிவிக்கும் ஆற்றல் உள்ளவர் சிறந்த புலவர் ஆவார். அவ்வாறு அறிவிப்பதற்கு அணியும் முக்கியமான ஒன்று. அணிகளில் தலைமையானது உவமை அணியாகும். தொல்காப்பியர் உவமையை அணிகளின் அன்னை எனக் கூறுகிறார் (இலக்குவனார், 2009:186).

உவமை நான்கு வகைப்படும். ஒன்றை ஒன்றோடு ஒப்பிட்டுக் கூறும்போது வினை, யான், மெய், உரு என்ற நான்கின் அடிப்படையில் ஒப்பிடப்படுகிறது. உவமை நான்கு வகைப்படும் என்பது உவமையியலின் தலைமைச் சூத்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது.

"வினை பயன் மெய்யுரு என்ற நான்கே
வகை பெற வந்த உவமைத் தோற்றம்"

(தொல்காப்பியம், உவமையியல்; சூத்திரம்:1)

தொழிலும், பயனும், வடிவும், நிறனும் என்று கூறப்பட்ட நான்குமே அப்பாகுபட வந்த உவமைக்கண் புலனாகும். உவமையானது, செவியினாலும், நாவினாலும் மூக்கினாலும், மனத்தினாலும் அறியப்படுவன ஆகும்.

வினையாவது நீட்டல், முடக்கல், விரித்தல், குவித்தல் முதலாயின. பயனாவது நன்மையாகவும், தீமையாகவும், இருப்பது. வடிவானது வட்டம், சதுரம், கோணம் முதலானது. நிறமானது வெண்மை, கருமை, நீலம் போன்ற வர்ணங்களைக் குறிப்பது ஆகும். (வெள்ளைவாரணன், 1985:11) உவமைக்கும் (உவமிக்கப்படும்) பொருளுக்கும் சில பொதுத் தன்மைகள் இருந்தால்தான் ஒன்றை மற்றதோடு உவமிக்க முடியும்.

வினை, பயன், வடிவு, நிறம் ஆகிய உவமைகளைச் செவியினால், நாவினால், மூக்கால், உணர்ச்சிகளால் அறியலாம் என்பதையும் உவமையியலின் தலைமைச் சூத்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது (தமிழண்ணல், 2009:423)

**வினை உவமை**

தொல்காப்பியம் உவமையியலின் அடிப்படையில் முதன்மையாக விளங்குவது 'வினை' ஆகும். வினையானது ஒரு செயலைக் குறிப்பது ஆகும். ஒரு செயலை இன்னொரு ஒரே மாதிரியான செயலோடு ஒப்பிட்டுக் கூறப்படுவதுதான் 'வினை' உவமை ஆகும்.

பாரதிததாசன் இயற்கையை வருணிக்கையில் கடல், கடல் அலை, இரவின் காட்சி, வானவில், நிலவு ஆகியவற்றை வினை உவமையால் விளக்குகிறார். கடற்கரை மணலைக் கண்ட பாரதிதாசன், அக்கடல் மணலில் வந்து மோதிச் செல்லும் அலையையும் கண்டு, அலை மேலும் கீழும் வீழ்ந்து ஏறிச் செல்வதைக் கல்வி நிலையத்தில் பயிலும் இளைஞரின் பூரிப்போடு உவமைப்படுத்திக் காட்டுகிறார்.

............கல்வி

நிலையத்தின் இளைஞர் போலப்

பூரிப்பால் ஏறும்; வீழும்;

புரண்டிடும்; பாராய்தம்பி (பாரதிதாசன், அழகின் சிரிப்பு, ப:2)

ஆசிரியப் பணியாற்றிய அனுபவமே இவ்வுவமத் தோற்றத்திற்கு உந்துதலாய்க் கவிஞர்க்கு அமைந்திருக்க வேண்டும்.

பட்டணத்தில் வாழும் மக்களின் தினசரி வாழ்க்கையிலும் இயற்கையழகைக் கண்டு உவமை மூலம் வெளிப்படுத்தியுள்ளார் கவிஞர். மக்கள் பொருள் ஈட்டத் தொழிலை நாடிச் செல்வார்கள். அப்படி நாடிச் செல்லும்போது கண்ட காட்சியைச் சிட்டுக்களின் செயலோடு உவமித்துக் காட்டியுள்ளார்.

படைமக்கள் சிட்டுப் போலப்

பறப்பார்கள் பயனை நாடி! (பாரதிதாசன், அழகின் சிரிப்பு, ப:47)

இக்கவிதையில், பட்டணங்களில் வாழும் மக்கள் தினமும் பொருள் ஈட்டுவதற்காக அவசர அவசரமாகவும் வேகமாகவும் செல்லும் காட்சிக்குச் சீட்டுக்கள் பறந்து போவது போல உவமையைப் படைத்துள்ளார்.

**பயன்உவமை**

ஒரு காரியத்தினால் விளைகின்ற பயனையோ அல்லது விளைவையோ உவமையோடு கூறுவது 'பயன்' உலமையாகக் கருதப்படுகின்றது. இவ்வுவமையைப் பயன்படுத்தி அச்செவியினால் விளையும் இன்ப துன்பத்தினை, பயனைக் கவிதைகளில் வெளிப்படுத்துகிறார் பாரதிதாசன்.

இனிப்பு என்றாலே சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரும் விரும்பி உண்பர். அதுவும் தேனை வெறுப்பவர் உண்டோ? வழியடையாளம் எனும் கவிதையில் தேனை உவமையாகக் காட்டித் தன் மகிழ்ச்சியினை வெளிப்படுத்தியுள்ளார் பாரதிதாசன்.

வான் வரை மேற்குத் திக்கை

மறைத்திட்ட புகை நீலத்தைத்

தேன்கண்டாற்போலே கண்டேன்

திகழ்காடு நோக்கிச் சென்றேன். (பாரதிதாசன், அழகின் சிரிப்பு, ப:9)

மேற்கில் உள்ள வானத்தினை நீல வண்ணத்திலான புகை மறைப்பது மிகவும் அரிதானக் காட்சி. இக்காட்சியினைக் கண்டவுடன் மகிழ்கிறார். அவர் இன்புற்ற அம்மகிழ்ச்சியை எப்படி வெளிப்படுத்துவது என்று தெரியாமல் இனித்திடும் தேனைக் கண்டது போல் உவமிக்கிறார், தேனை வெறுப்பவர் கிடையாது; தேனை விரும்பிப் பயனடைபவரே அதிகம். தான் அடைந்த பயனை இக்கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார். தேனைக் கண்டாலே ஆனந்தம் அடைவோம். மகிழ்ச்சியோடு உண்டு மகிழ்வோம். நீல வண்ணப்புகை, வாளத்தை மறைத்திருப்பதைக் கண்ட மகிழ்ச்சியைத் தேனைக் கண்டது போல் மகிழ்ச்சியடைவதாகக் கூறி மகிழ்ந்து பயனடைகிறார் பாரதிதாசன். தமிழ் மொழியில் பல அரிய அற்புதமான நூல்கள் கிடைத்திருப்பது கனிச்சாறு போல் இருப்பதாக உவமை கூறுகின்றார்.

கனிச்சாறு போற் பலநூலெல்லாம் கண்டு

காத்ததும் அளித்ததும் தமிழ் செய்த தொண்டு

தமிழனே இது கேளாய்.....

கனியின் சாற்றினைப் பருகிவிட்டு அதனுடைய சுவையை மீண்டும்மீண்டும் சுவைப்பதற்காகக் கேட்டுப் பருகுவது போல் தமிழ் மொழியில் தொடர்ந்து படித்துக் கொண்டே இருப்பதற்காக அரிய பல நூல்களைத் தமிழ் மொழி வழங்கியுள்ளது என்பதைக் கனிச்சாற்றோடு இணைத்துத் தமிழின் தொன்மையையும் தமிழின் சுவையையும் கவிதை வடிவில் வழங்கியுள்ளார் கவிஞர்.

**மெய் உவமை**

ஒரு பொருளின் வடிவத்தை இன்னொரு பொருளின் வடிவத்தோடு உவமித்துக் கூறுவது 'மெய்' உவமை ஆகும். புதுப்புது உவமைகளைக் கூறிக் கவிதை எழுதியவர் பாரதிதாசன்.

'மெய்' உவமையில் மரம், மலர்கள், ஞாயிறு, நிலவு போன்றவற்றை வருணித்துள்ளார். காட்டில் நடந்து செல்லும்பொழுது, காட்டின் அழகைக் கண்ட பாரதிதாசன் பாதையில் இடைப்படும் தோற்றத்தினை எழிலுறப் பாடுகின்றார்,

வன்மை கொள்பருக்கைக்கல்லினன

வழியெல்லாம் பள்ளம், மேடு!

முன்னாக இறங்கி ஏற

முதலைகள் கிடப்பதைப்போல்

சின்னதும் பெரிதுமான

வெடிப்புக்கள் தாண்டிச் சென்றேன்;

(பாரதிதாசன், அழகின்சிரிப்பு, ப:9)

தான் நடந்து சென்ற பாதை மிகவும் கரடுமுரடான பாதையாக அமைந்துள்ளது. போகும் வழியெல்லாம் கூர்மையான கற்கள் மற்றும் பள்ளம் மேடுகளாக

அமைந்துள்ளன. அப்பள்ளம் மேடுகளில் இறங்கியும் ஏறியும் கடந்து செல்கிறார். மேலும், கடந்து செல்லும் பாதைகளில் சின்னதும் பெரியதுமாக நிறைய வெடிப்புகள் நிறைந்துள்ளன. சின்னதும் பெரியதுமாக நிலத்தில் தோன்றியிருந்த வெடிப்புகளை உவமைப்படுத்த முதலைகளை உவமேயமாகப் பயன்படுத்தியுள்ளார்.

**உரு உவமை**

ஒரு பொருளின் தன்மையை அல்லது நிறத்தை உவமையாகக் காட்டி வர்ணிப்பது 'உரு' உவமை ஆகும். ஒரு பொருளின் நிறத்தை இன்னொரு பொருளின் நிறத்தோடு பொருத்தி உவமையை வெளிப்படுத்தும்பொழுது, அக்கவிதை அழகு பெறுகிறது. பாரதிதாசன் வெளிப்படுத்தும்பொழுது அக்கவிதை கூடுதல் அழகு பெறுகிறது, பாரதிதாசன் வெளிப்படுத்தும் 'உரு' உவமைகளும் அவருடைய கவிதைகளில் அழகாக வெளிப்பட்டுள்ளன.

பாரதிதாசன் விலங்குகள் மூலமாகவும் 'உரு' உவமையை வெளிப்படுத்தி உள்ளார். இக்கவிதையில் நிலவு மேல் எழுந்த மின்னல், எருதின் மேல் பாயும் வேங்கைக்கு உவமையாகச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வுவமையானது வினை உவமை போல் தோன்றினாலும், உரு உவமையையே வெளிப்படுத்துகின்றது.

எருதின் மேற்பாயும் வேங்கை,
நிலவுமேல் எழுந்த மின்னல்,
சருகெலாம் ஒளிச்சேர் தங்கத்
தகடுகள் பாரடாநீ! (பாரதிதாசன், அழகின் சிரிப்பு, ப:13)

இக்கவிதையில், நிலவுமேல் எழுந்த மின்னலுக்கு எருது மற்றும் வேங்கையை உவமேயமாகப் பயன்படுத்தி உவமையை வெளிப்படுத்தியுள்ளார். வெண்மை நிறமுடைய நிலவு மீது மேகம் படரும்போது சாம்பல் நிறமாகத் தோற்றமளிக்கிறது. சாம்பல் நிறமாகத் தோன்றும் நிலவின் மீது பளிச்சென்று தோன்றும் மஞ்சள் நிற மின்னல்படும் போதும் காட்சியினை உவமையாகக் காட்டியுள்ளார் பாரதிதாசன். நிலவுமேல் எழுந்த மின்னல் காட்சியினை எருமையின் மீது வேங்கை பாயும் காட்சிக்கு உவமையாகக் காட்டி அழகியல் பார்வையை உணர்த்தியுள்ளார்.

**முடிவுரை**

பாரதிதாசனின் உவமைகள் தனித்தன்மை வாய்ந்தவை. காலங்காலமாகப் புலவர்கள் கையாண்ட உவமைகளைப் புதிய போக்கில் அமைப்பதிலும், இதுவரை எவரும் கையாளாகாத பாங்கில் உவமைகளை அமைத்துக் காட்டுவதிலும் தனித்தன்மையைக் காணலாம். பாரதிதாசன் தன் கவிதைகளில் தொல்காப்பிய மரபின் அடிப்படையிலேயே புதிய உவமைகளைக் கவிதைகளில் படைத்துள்ளார். தொல்காப்பிய உவமையியல், வினை, பயன், மெய், உரு என உவமைகளைப் பாகுபடுத்தியுள்ளது. வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கு உவமைகளும் பாரதிதாசனின் கவிதைகளில் விரவிக் காணப்படுகின்றன.

**மேற்கோள்**

1. அப்துல்கறீம், மு.(1980).பாரதிதாசன் பாட்டுத்திறம். சென்னை: வானதி பதிப்பகம்
2. கிருஷ்ணசாமி, க.(2004). பாரதிதாசன் பாட்டின்பம். சூரியா பதிப்பகம்.
3. சாயபுமரைக்காயர், மு.(1990).பாரதிதாசன் ஆய்வுக் கோவை. சென்னை: கங்கை புத்தக நிலையம்.
4. சீனி நைனாமுகம்மது, செ.(2004). கவிதைப் பூங்கொத்து கோலாலம்பூர்: உங்கள் குரல் வெளியீடு.
5. சுப்பு ரெட்டியார், ந.(2001).பாவேந்தரின் பாட்டுத்திறன். சென்னை: சுரபுக்ஸ் (பிரைவேட்) லிமிடெட்.
6. சுந்தராசன்,சே. (2015). பாவேந்தர் பாரதிதாசனாரின் அழகின் சிரிப்பு. சென்னை: முல்லை நிலையம்.
7. செல்வராசன், மா.(1979). பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர். சென்னை: பாரிநிலையம்.
8. தமிழண்ணல்.(2009).தொல்காப்பியம். மதுரை: சிந்தாமணி பதிப்பகம்.
9. பாரதிதாசன்.(1990). இசையமுது.சென்னை: பாரிநிலையம்.
10. பாரதிதாசன்.(1990).பாரதிதாசன் பேசுகிறார். சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
11. பாலசுப்பிரமணியன், சி.(1981). வாழையடி வாழை. சென்னை: நறுமலர் பதிப்பகம்.
12. புலியூர்க்கேசிகன்.(1983).தொல்காப்பியம் சென்னை: பாரிநிலையம்.
13. வெள்ளைவாரணன், க.(1985). உவமையியல்.மதுரை:மலர் பிரிண்டர்ஸ்.
14. முருகேசன், ந.(1990). பாரதிதாசன் கற்பனை.சிதம்பரம்: வேலன் பிரஸ்

# புலவர் — அரசர் முரண்பாடுகள்

**ப.ஆனந்தகுமார்**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர்

சங்க காலப் புலவர்கள் கல்வியில் சிறந்த கவிவாணர்களாகத் திகழ்ந்துள்ளளர். உலகியற் பொருள்களையும் இயற்கைப் பொருள்களையும் நுட்பமாக ஆராய்ந்து அவற்றைத் தமது பாடல்களில் சுட்டிக்காட்டி மக்களை அறநெறியில் செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளனர். அவ்வாறு புலவர்களால் பாடப்பட்ட பல பாடல்கள் உடனுக்குடன் பாடப்பட்டவைகளாகும். மேலும், அரசர் முன்னிலையில் கண்டித்தல், அறிவுறுத்தல் என நேரடியாக நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளைக் குறித்தும் அப்பாடல்கள் விளம்புகின்றன. இவற்றின் மூலம் அக்காலப் புலவர்கள் அரசரைப் பாடிப் பரிசில் பெறுவதையே தொழிலாகக் கொள்ளவில்லை. அரசர்கள் தவறு செய்தபோது பயப்படாமல் கண்டித்து, அறநெறிப்படுத்திய புலவர்கள் அரசர்களுக்கு அவ்வப்போது அறிவுரைகளையும் முரண்பட்ட செய்திகளையும் எடுத்துரைப்பதை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

அதியமான் நெடுமான் அஞ்சி சிறந்த வள்ளல்; ஔவையாருக்கு நெல்லிக்கனி நல்கிய தந்த பெருமான்; அவனை நாடிச் சென்றோர் பெருஞ்சித்திரனார். யாது காரணம் பற்றியோ அதிகமான் புலவரை நேரில் காணவில்லை; பரிசிலை மட்டும் புலவர்க்கு அனுப்பினான். புல சிறுகுன்றுகளும் பெருமலைகளும் கடந்து அதிகமானைக் காண வந்த புலவரது மனம் பெரிதும் துன்புற்றது. 'பரிசில் பெறுவதென்றே புலவர் தொழில் என்றன்றோ கருதிவிட்டனன் இவ்வதிகமான்! என்று புலவர் தம் நெஞ்சம் நைந்தது. பரிசில் பெற மறுத்து, அவர் ஒரு பாடல் பாடினார்,

"குன்றும் மலையும் பலபின் ஒழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற் கென
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்!
காணாது ஈந்த இப்பொருட்கு யான்ஓர்
வாணிகப் பரிசிலன் அல்லேன்!" (புறம்.208)

என்னும் இப்பாடற் பகுதியில் உள்ள எள்ளற்சுவை ஊன்றி உணரத்தக்கது.

புலமைக்கு நிகழ்ந்த வேதனையும் வண்மைக்கு நேர்த்த இளிவரவும் குறித்த புலவர், 'பாட்டுப் பாடினேன்; பாட்டுக்கு விலையாகப் பரிசு கொடுத்தான் என்று பண்டமாற்றுப் பேசும் வாணிகப் பரிசிலன் அல்லேன்!' என்று தம் பெருமிதத்தை அதிகமான் நெஞ்சு தைக்க எடுத்தியம்பினார். இவற்றில் வாணிகப் பரிசிலன் அல்லேன் என்று தம்மை எதிர்மறையாற குறிப்பதுகொண்டு அக்காலத்தே வாணிகப் பரிசிலரும் இருந்திருத்தல்கூடும் என்று நாம் முடிவு செய்யலாம்.

வெளிமான் என்பான் ஒரு சிற்றரசன். சிறந்த வள்ளல். அவன்பால் பரிசில் பெறும் நோக்கங்கொண்டு பெருஞ்சித்திரனார் போனார். புலவர் செல்லுமுன் வெளிமான் இறந்துபட்டனன். இவன் தம்பி இளவெளிமான் பெருஞ்சித்திரனாரின் தரமறியாது சிறிது பொருள் கொடுத்தனன். அகமகிழ்ச்சியின்றி முகம் மாறுபடத்தரும் பிச்சைப் பொருளை முயற்சியற்ற கீழ்மக்கள் விரும்பக்கூடும். பெருஞ்சித்திரனார் அத்துணை இழிதகவுடையார் அல்லர். அவர்தம் வரிசையறிந்து 'வருக' வருக! வரவேற்க இப்பரந்த உலகில் பலர் உண்டு. புலமையின் சிறப்பை இழிவுசெய்து ஈந்த புன்மையால் ஏற்படும் உள்ளத் தளர்ச்சியை அவர் விரும்பவில்லை. தம் நெஞ்சினை நோக்கி, 'நெஞ்சமே, தளர வேண்டர் இந்த உலகம் விசையுடையார்க்குப் பெரிது' என்று உரைக்கிறார்:

"அகன் நக வாரா முகன் அழி பரிசில்
தாளி லாளர் வேளாளர் அல்லர்;
வருகென வேண்டும் வரிசை யோர்க்கே
பெரிதே உலகம்! பேணுநர் பலரே!" (புறம்.207)

வள்ளல்களின் செவிகளில் விளக்கம் அமைந்த சொற்களை விதைத்து தாங்கள் நினைத்ததை முடிக்கும் நெஞ்ச வலிமை படைத்தவர்கள் புலவர்கள். அவர்கள் தங்கள் சிறப்பைப் பாதுகாக்கப்படும் பரிசில் வாழ்க்கையுடையவர்கள்.

**மன்னர்களை இடித்துரைத்தல்**

மன்னர்கள் தவறான வழியில் செல்லும்போது அவர்களை நெறிப்படுத்திப் புலவர்கள் அறிவுரைகள் வழங்கியுள்ளனர். நாட்டினை நல்ல வழியில் வழிநடத்திச் செல்லவும் குடிமக்களைக் காக்கவும் நீதி வழங்கவும் குடிமக்களிடம் வரி வாங்கும் முறையும் குறித்து பல்வேறு அறிவுரைகளை மன்னர்களுக்குப் புலவர்கள் வழங்கினர். அறிவுரை வழங்கும் புலவர்க்கு அறிவுரை கூறத்தக்க ஆளுமையும் மன்னர்களுக்கு அதனைக் கேட்கும் ஆளுமைத் திறனும் இருந்ததை அறிய முடிகின்றது.

**நாட்டு வளம் பெறுக**

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாகத் திகழ்வது அந்நாட்டில் இருக்கும் நீர்வளமும் நிலவளமுமேயாகும். இவற்றைப் புலவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். நாட்டினை வளப்படுத்தும் இத்தகைய செயலைச் செய்யாது நீங்குவதால் நாட்டில் ஏற்படும் விளைவுகளைக் குறித்தும் அவற்றைச் செய்வதால் ஏற்படும் நன்மையையும் புகழையும் குறித்துப் புலவர் மன்னருக்கு எடுத்துரைத்ததை,

"நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தோடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே" (புறம்.18:18–23)

என்ற பாடலின் மூலம் உணரலாம்.

**குடிகளைக் காத்தல்**

மழை பெய்ய வேண்டிய காலத்தில் பெய்யாமல் விளைச்சல் குறைந்து மக்கள் இயல்பாக இல்லாமல் செயற்கையாக இருந்தால் மன்னனையே இந்த உலகம் பழிக்கும். அதை நீ நன்கு உணர்ந்திருந்தால் நீயும் மற்றவரின் பழிச்சொற்களைக் கேளாது, ஏரைக் காப்பவரின் உழவர் குடிகளைக் காத்து அதனால் மற்றக் குடிகளையும் காப்பாயானால் உன்னுடைய பகைவரும் உன்னைப் போற்றி வணங்குவர் என்று புலவர் அறிவுறுத்துவதை,

"மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர் பழிக்கும் இக்கண்ணகன் ஞாலம்
அதுநற்கு அறிந்தனை யாயின் நீயும்
நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறம் தருகுவை யாயின் நின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே" (புறம்.35:27–34)

என்பதன் மூலம் அறியலாம். அன்பையும் அருளையும் நீக்கிப் பாவம் செய்து, நீங்காத நரகத்தை அடைபவருடன் சேராது, உன்னால் காக்கப்படும் நாட்டையும் நாட்டில் உள்ளவர்களையும் குழந்தையைப் பேணுவதுபோல நின்று பாதுகாப்பாயாக. இவ்வாறு காப்பது எளிதன்று என்பதை,

"அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரோடு ஒன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி
அளிதோ தானேஅது பெறல்அருங் குரைத்தே" (புறம்.5:5–8)

என்ற பாடல் வரிகளின் மூலம் புலவர் மன்னரை இடித்துரைக்கின்றார்.

**மன்னர் ஆட்சி முறை**

உலகத்திற்கு அரசனது முறையான ஆட்சியே உயிர். எனவே இவ்வுலகத்தை ஆளும் மன்னன் முறையறிந்து ஆட்சி புரிய வேண்டும் என்பதை,

"நெல்லும் உயிர்அன்றே நீரும் உயிர்அன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யான்உயிர் என்பது அறிகை
வேனிகு தானை வேந்தற்குக் கடனே" (புறம்.186)

என்பதன் மூலம் அறியலாம். மன்னர் பகைவர் நாடுகளுடன் போர் புரியும் போது, வளைந்த கதிர்களை உடைய வயல்களை உன்னுடைய வீரர்கள் அழித்தாலும் ஊரைத் தீயிட்டுக் கொலுத்தினாலும் பரவாயில்லை அவர்களின் காவல் மரங்களை மட்டும் வெட்டாதே என்று புலவர் அறிவுறுத்தியதை,

"நீயே பிறர்நாடு கொள்ளும் காலை அவர்நாட்டு
இறங்குகதிர்க் கழனிநின் இளையரும் கவர்க
நனந்தலைப் பேரூர் எரியும் நைக்க
மின்னுநிமிர்ந் தன்னநின் ஒளிறுஇலங்கு நெடுவேல்
ஒன்னார்ச் செகுப்பினும் செகுக்க என்னதூஉம்
கடிமரம் தடிதல் ஓம்புநின்
நெடுதல் யானைக்குக் கந்தாற் றாவே" (புறம்.57:5–11)

என்ற வரிகளில் காவல் மரங்களை வெட்டி, உன்னுடைய யானைகளை கட்டி வைக்கும் கட்டுத்தறியாக இருக்கக்கூடியவை அம்மரங்கள் அல்ல என்றும் அதனால் போரைத் தவிர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நெடுங்கிள்ளியின் நாட்டை நலங்கிள்ளி முற்றுகையிட்டான். அப்போது நெடுங்கிள்ளி அவனை எதிர்த்துப் போரிடாமல், தன்னுடைய கோட்டைக் கதவுகளை திறக்காமல் உள்ளேயே இருந்தான். இதனைக் கண்ட புலவர் அவனை இடித்துரைக்கறாார்,

"இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடையக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ
திருந்தாரை நோன்வெளில் வருந்த ஒற்றி
நிலமிசை புரளும் கைய வெய்துயிர்த்து
அலமரல் யானை உருமென முழங்கவும்
பாலில் குழவி அலறவும் மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும் நீரில்
வினைபுனை நல்லில் இனைஉடிக் கேட்பவும்
இன்னாது அம்ம ஈங்குஇனிது இருத்தல்
துன்னரும் துப்பின் வயமான் தோன்றல்
அறவை யாயின் நினது எனத் திறத்தல்
மறவை யாயின் போரொடு திறத்தல்" (புறம்.44:12)

என்ற பாடலடிகள் யானைகள் உணவின்றி பசியில் இடியைப் போல் முழங்குகின்றன. பால் இல்லாமல் குழந்தை அழுதும், மகளிர் பூ இல்லாமல் வெறும் கூந்தலை முடித்துதும் குடிமக்கள் நீர் இல்லாமல் வருந்தியும் இருக்கின்றனர். இதை எல்லாம் பார்த்து நீ எதுவும் செய்யாமல் இருப்பது இழிவான செயலாகும். நீ நலங்கிள்ளியின் முன் வந்து இது உன்னுடைய நாடு என்று சொல்லி கதவை திறந்து விடு. இல்லை என்றால் அவனுடன் போரிட்டு நாடு திரும்பு என்று புலவர் இடித்துரைத்தார்.

**பேகனின் புறஒழுக்கத்தை இடித்துரைத்தல்**

புலவர்களின் புலமையையும் ஆளுமைத் திறனையும் பார்த்த பேகன் பரிசில் வழங்க வந்தான். இதனை அறிந்த புலவர்களை நாங்கள் பசித்து வரவில்லை. நீ அறம் செய்தல் வேண்டும். இன்றிரவே தேர் ஏறிச் சென்று உனது மனைவி கண்ணகியின் துன்பத்தைப் போக்க வேண்டும். இதுவே நீ எனக்கு வழங்கும் பரிசில் என்று அறிவுறுத்தினார். இதனை,

“பசித்தும் வாரேம் பாரமும் இலமே
களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி
அறம்செய் தீமோ அருள்வெய் யோய்என
இஃதியொம் இரந்த பரிசில் அஃது இருளின்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்னாது உறைவி அரும்படர் களைமே” (புறம்.145:4–10)

என்பதால் அறியலாம். மேலும் நேற்று யாம் செல்வழிப் பண்ணைப் பாடினோம். அப்போது ஒருத்தி கண்ணீர்விட்டு வருந்தினாள். அவள் தன்னுடைய கூந்தலை முடித்து பூச்சூடி மகிழ அருள் செய்ய வேண்டும் என்று எடுத்துரைத்ததை.

“சீறியாழ் செவ்வழி பண்ணிநின் வன்புல
நன்னாடுபாட என்னை நயந்து
பரிசில் நல்குவை யாயின் குரிசில் நீ
நல்கா மையின் நைவரச் சாஅய்
அருந்துயர் உழக்கும்நின் திருந்திழை அரிவை
கலிமயிற் கலாவம் கால்குவித் தன்ன
ஒலிமென் கூந்தல் கமழ்புகை கொளீஇ
தண்கமழ் கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே” (புறம்.146:3–11)

என்றும்,

“கன்முழை அருவிப் பன்மலை நீந்திச்
சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததைக்

கார்வான் இன்னுறை தமியள் கேளா
நெருநல் ஒருசிறைப் புலம்கொண்டு உறையும்
அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை
நெய்யொடு துறந்த மையிருங் கூந்தல்
மண்ணுறு மணியின் மாசுஅற மண்ணிப்
புதுமலர் கஞல இன்று பெயரின்
அதுமன்எம் பரிசில்" (புறம்.147)

என்ற பாடல்களின் மூலம் புலவர்கள் பேகனை தன் மனைவிடம் சென்று சேர வேண்டும் என்று இடித்துரைத்தனர். இவ்வாறு புலவர்கள் தங்களின் ஆளுமைத்திறனால் மன்னர்களில் தவறுகளைச் சுட்டிக்காட்டி அவர்களை நல்வழிப்படுத்தவும் இடித்துரைத்தனர் என்பதை அறிய முடிகின்றது.

**காணாது ஈயும் பரிசில் மறுப்பு**

காணாது ஈயும் பரிசில் என்றும் இரவலரை நோகச் செய்யும், தினைத்துதுணை ஆகினும் நேர்நின்று புலவரின் வரிசை அறிந்து ஈதலையே அவர்கள் விரும்பினர். அதியமான் நெடுமான் அஞ்சி தன்னை நாடி வந்த பெருஞ்சித்திரனாரைக் கண்டு பேசி அவர்க்குத் தேவையான பொருளை வழங்காமல் வேற்றார் மூலம் ஏதோ ஒரு பொருளைக் கொடுத்து "போய் வருக" என அனுப்பிவிட்டான். இது தன் புலமையையும் தகுதியையும் அவமதித்த செயல் என்பதால் அதை ஏற்க மறுத்த அப்புலவர்.

"குன்று மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசில் கொண்டனெனட செலற்கென
நின்ற என்னயந் தருளி ஈதுகொண்டு
ஈங்கனஞ் செல்க தானென என்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்
காணா தீத்த இப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசிலன் அல்லேன் பேணித்
தினையனைத் தாயினும் இனிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே"

எனக் கூறி அவ்விடம் விட்டு அகன்றார். தம் தகுதி அறிந்து விருப்பம் அறிந்து, நேரில் கண்டு உபசரித்து வழங்கும் பொருள் சிறிதாயினும் அதைப் பெறுவதில் உவப்படைந்த புலவர்கள் தம்மை எப்படி வரவேற்றுப் பரிசில் வழங்க வேண்டும் எனவும் விளக்கியுள்ளனர். நேரில் கண்டு உள்ளம் உருகியும் உவந்தும் தரவேண்டும் என்பதில் புலவர்கள் உறுதியாய் இருந்தனர். இளவெளிமான் காணாமல் ஈத்த பொருளைப் பெறாமல் வெளிச் சென்ற பெருஞ்சித்திரனார்.

"வருகென வேண்டும் வரிசை யோர்க்கே
பெரிதே உலகம் பேணுநர் பலரே
மீளி முன்பின் ஆளி போல
உள்ளம் உள்ளவிந் தடங்காது வெள்ளென
நோவா நோன்வயிற் றிரங்கு
வாயா வன்கனிக்கு உலமரு வோரே" (புறம்.207:6–11)

என்று பாடிய பாடலில் உறுதியும் தன்மானமும் வெளிப்படுகின்றன.

**இறுதியாக**

- ☆ சங்கப்பாடல்களில் ஈகையானது தமக்கென வாழாப் பிறர்க்கென வாழுதல், பகுத்து வழங்குதல், புகழ்பட வாழ்தல், உலக நிலையாமை உணர்வு என்னும் மக்கட் பண்புகளில் அறவியல் நோக்குடன் இடம் பெற்றிருப்பதை அறிய முடிகிறது.
- ☆ புலவர்கள் அஞ்சாமை எண்ணம் உடையவர்களாக இருந்துள்ளார்கள். புரவலர்கள் தமிழுணர்வு மிக்கவர்களாக இருந்துள்ளனர். அவர்களின் தமிழ்ப்பற்றே புலவர்களிடம் பெருமதிப்புக்கொள்ளச் செய்தது.
- ☆ அரசர்கள் தவறு செய்ய நேர்ந்தால் அத்தவற்றினைத் தடுத்துப் பழிநேராமல் காத்துள்ளனர், அரசனை 'அவன்' என்றும் புலவரை 'அவர்' என்றும் அழைக்கப்படுவதிலிருந்து சங்க காலத்தில் புலவர்களுக்கு இருந்த மதிப்பினை அறிய முடிகிறது.